குணா கல்வி நிலையம்
திருக்கோணமலை
2013ம் ஆண்டில்
புலமைப்பரிசில் பரீட்சையை
எதிர் நோக்கும்
மாணவர்களுக்கான
வகுப்புக்கள் நடைபெறுகின்றன
உங்கள் வெற்றிக்கு குணாவுடன்
இணையுங்கள்
0777 03 49 08

புரட்டாதி மாதம் 28ம் திகதி

October 14, 2012

# மலைமுரசு®

MALAIMURASU

அறைவு 01 இயம் 12

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்

விலை – 20.00 பக்கங்கள் – 10 பிரதி ஞாயிறு தோறும் திருமலையில் இருந்து வெளியாகும் வார இதழ்

# சம்பூரைக் குறிவைக்கும் இந்திய டாடாக்கள்!

சம்பூரில் கையகப்படுத்தப்பட்டுள்ள நிலத்தில் உருவாகவுள்ள விசேட வர்த்தக வலயத்தில் தமது முதலீடுகளை மேற்கொள்ள இந்திய வாகன கம்பனிகள் பெரும் ஆர்வம் காட்டிவருவது தெரியவந்துள்ளது. இலங்கையின் வாகனச் சந்தையின் அரைப்பங்கினைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் இந்தியக் கம்பனிகளான டாட்டா, மாருதி, மகேந்திரா போன்றவை சம்பூரில் தமது கால்களை ஆழமாகப் பதித்துக்கொள்ள விரும்புகின்றன. இலங்கையின் பலவீனமான சுற்றுச் சூழல் சட்டவமைப்பைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதுடன் சேப்பா ஒப்பந்தத்தின் மீது [Comprehensive Economic Partnership Agreement (CEPA)] இலங்கை விருப்பமற்றிருப்பதால் விசேட வர்த்தக வலயத்திற்குள் நகர்வதனூடாக தம்மைப் பாதுகாத்துக்கொள்ள இவ்விந்தியக் கம்பனிகள் முயற்சிக்கின்றன. மேலும் மருந்துப் பொருட்களை உற்பத்தி



செய்யும் கூட்டுமுயற்சியொன்றினை சம்பூரில் தாபித்துக்கொள்ளும் பேச்சுவார்த்தைகளிலும் இலங்கை அரசுடன் இந்தியக் கம்பனிகள் இறங்கியுள்ளன. 2011ம் ஆண்டில் இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலான வர்த்தகத்தில் 5.16 பில்லியன் அமெரிக்க டொலர்கள் பரிமாற்றப்பட்டுள்ளதுடன் இந்தியா 4.44 அமெரிக்க பில்லியன் டொலர்களை ஏற்றுமதியூடாக பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. வாகன உதிரிப் பாகங்கள் அனைத்தையும் உற்பத்தி செய்யும் முறைமையை இலங்கையில் உருவாக்கினால் கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்துக்களுக்கு இலகுவான துறையாக இலங்கை இருப்பது பெரும் வரப்பிரசாதமாக இக் கம்பனிகள் கருதுகின்றன. அத்துடன் ஒப்பீட்டளவில் ஊழியச் செலவு குறைந்த நாடாகவும், வளச் செறிவு அதிகமான நாடாகவும் இலங்கையிருப்பது இக்கம்பனிகளை

(10ம் பக்கம் பார்க்க)

## உவர்மலை விவேகானந்தாவில் ஓர் பசுமைப் புரட்சி



உலக ஆசிரியர் தினத்தன்று உவர்மலை விவேகானந்தா கல்லூரி பழைய மாணவர் சங்கத்தால் பாடசாலைக்கு மரக்கன்றுகள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

உவர்மலை விவேகானந்தா வின் பழைய மாணவர் சங்கம் அமுல்படுத்தியுள்ள 'இது எங்கள்

(10ம் பக்கம் பார்க்க)

## மூதூர் முஸ்லிம் பெண்கள் கல்லூரியில் பரிசளிப்பு விழா.




மூதூர் முஸ்லிம் மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா (09.10.2012) செவ்வாய்க்கிழமை கல்லூரி அதிபர் ஏ.எஸ். உபைத்துல்லா தலைமையில் இடம்பெற்றது.

(10ம் பக்கம் பார்க்க)

## பண விடயத்தில் மக்கள் கவனம் செலுத்த வேண்டும் காவல்துறை எச்சரிக்கை

கொடுக்கல் வாங்கல்களின் போது பயன்படுத்தப்படும் பணத்தாள்களைப்பற்றிப் பொதுமக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு பொலிஸார்

(10ம் பக்கம் பார்க்க)

## மின்னல் தாக்கி குடும்பஸ்தர் பலி

கிண்ணியா, குரங்குபாஞ்சான் பகுதியில் மின்னல் தாக்கி குடும்பஸ்தர் ஒருவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்துள்ளார். குரங்குபாஞ்சான் குளக் கட்டுக்கு அருகில் மாடுகளை மேய்த்துக் கொண்டிருந்த போதே மின்னல் தாங்கி

(10ம் பக்கம் பார்க்க)

## கிரேஸ் இல்லத்தில் ஆசிரிய தின நிகழ்வு

07.10.2012 மாலை 6 மணிக்கு கிரேஸ் இல்லத்தில் ஆசிரியர் தின விழா கொண்டாடப்பட்டது. கற்பிக்கும் ஆசிரியர்களை கௌரவிக்கும் முகமாக

(10ம் பக்கம் பார்க்க)

## உள்ளூராட்சி வார மரதனோட்டப் போட்டிகள்

(கதிரவன்)

திருக்கோணமலை நகரசபை உள்ளூராட்சி வாரத்தைச் சிறப்பாகக் கொண்டாடும் முகமாக பாடசாலை மாணவர்களுக்கான மரதன் ஓட்டப் போட்டியொன்றை நடாத்தவுள்ளது. இப்

(10ம் பக்கம் பார்க்க)

## மொழி பிரச்சினைகளை தீர்க்க 1956

(பவாஸ்)

இலங்கை வாழ் மக்களிடத்தில் ஏற்படும் மொழி தொடர்பான பிரச்சினைகளை தீர்த்து வைக்கவென அரசாங்கம் புதிய தொலைபேசி இலக்கமொன்றை

(10ம் பக்கம் பார்க்க)

## "தேடல்" சஞ்சிகை வெளியீடும் கௌரவிப்பும்

தி/சீனக்குடா தமிழ் வித்தியாலயத்தில் பாடசாலை அதிபர் திரு.ந.பரமேஸ்வரன் அவர்களின் தலைமையில்

(10ம் பக்கம் பார்க்க)

## விளையாட்டுப் போட்டி



கிறீன்விச் சர்வதேசப் பாடசாலையின் விளையாட்டுப் போட்டி 14.10.2012ல் மக் கெய்சர் அரங்கில் நிகழ ஏற்பாடாகியுள்ளது. இவ்விளையாட்டுப் போட்டியின் பிரதம விருந்தினராக பிரதி

(10ம் பக்கம் பார்க்க)

கேம்பிறிஜ் பல்கலைக்கழகத்தின் ஆங்கிலச் சான்றிதழ்கள்

வெளிநாடு செல்வதற்கு சர்வதேசத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்

ஆங்கில கற்கை நெறி

READING WRITING LISTENING SPEAKING

உயர்தரம் படித்துவிட்டு பெறுபேறுகளுக்காய்க் காத்திருக்கும் உங்களுக்காக முழுநேர பகுதிநேர வகுப்புக்கள்

NEW INTAKE NOW OPEN FOR FEBRUARY 2013 EXAM

➡ KET - KEY ENGLISH TEST

➡ PET - PRELIMINARY ENGLISH TEST

*Veal Business College, No.159A, Station Road, Trincomalee. T.P 026 2227622*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலைமுரசு

159A, 2ம் மாடி, கடல் முக வீதி,
திருகோணமலை.
malaimurasu@hotmail.com
0754252042

## வணக்கம் !

கிழக்கு மாகாணத் தமிழர்களையே அதிஉச்சிக்குள்ளாக்கிய விடயமொன்று அவர்களிற் பலருக்குத் தெரியாமலேயே நடந்தேறி வருகின்றமை ஆழ்ந்த மனவருத்தத்தை உருவாக்குகின்றது. நாங்கள் யாவரும் தமிழர்கள் என்று சொல்வதில் உங்களுக்கு ஏதேனும் வெட்கம் உண்டா? இல்லையெனில் உங்கள் தாய் மொழி தமிழ் என்பதை நீங்கள் ஏற்றுக்கொண்டேதான் ஆக வேண்டும். அத் தாய் மொழிக்கான விழாவில் அம்மொழிக் கேற்படுத்தப்படும் மரியாதையீனங்கள் எங்களுக்கு ஏற்படுத்தப்படும் மரியாதையீனங்களாகவே கருதப்படல் வேண்டும்.

"தமிழ் இலக்கிய விழா" என்பது தமிழர்களின் இலக்கிய விழாவே. அதில் தமிழ் பேசும் ஒவ்வொருவரும் கலந்துகொள்ள வேண்டும் என்பது எமது கடமை என்பதும் அவ்விலக்கிய விழாவின் செல்நெறி என்பது தமிழன்னைக்குரிய சிரம் தாழ்த்திய வணக்கமாகவும் கொள்ளப்பட வேண்டும். உலகில் ஓராயிரம் மொழிகள் பேசப்படும் போது எட்டு மொழிகளுக்கு மட்டுமே செம்மொழி அந்தஸ்த்து கிடைத்துள்ளது. மொழியொன்றின் செம்மைத் தன்மையாலும், முதுமைத் தன்மையாலும், ஏனைய மொழிகளில் சாராத் தன்மையினாலும் உருவான மொழிகளைச் செம்மொழியாக உலகு கொள்கின்றது. அச் செம்மொழிகளில் எமது தமிழும் ஒன்றல்லவா? நாம் அம் மொழியைப் பேசும் இனமல்லவா? அவ்வினத்தின் பிரதேசமொன்றில் நிகழும் அம் மொழியின் இலக்கிய ஆய்வரங்கு விழாவிற்கு வருகை தராத நாம் அம்மொழியை மதிக்கின்றோமா?

அடுத்து அவ்விழா ஓர் அரச விழாவாய்ப் போய்த் தரங்கெட்டுக் கிடப்பதற்கு நமது அசண்டையீனமும், இலக்கியவாதிகளிடம் இல்லாத ஒற்றுமையும் ஓர் காரணமல்லவா? அதனிலும் குறிப்பாக திருக்கோணமலை மாவட்டத்தின் உண்மை இலக்கியவாதிகளிடையே புரிந்துணர்வு அறவே இல்லாமற் போயிருப்பது கிழக்கின் 2012ன் தமிழ் இலக்கிய விழா ஆய்வரங்குகள் மாவட்டங்களிடையே துண்டாடப்பட்டுக் கிடப்பதைக் காட்டி நிற்கின்றது.

எம் முன்னே முன்னைய கல்விப் பிரதிச் செயலாளர் திரு. தண்டாயுதபாணி இக்கணத்தில் வந்து போகின்றார். அவரது தனிமுயற்சியில் கிழக்கு இலக்கிய விழாக்களும் ஆய்வரங்குகளும் இரு தடவைகள் சிறப்பாக நடந்தேறியிருக்கின்றன. தற்போது அவர் கிழக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவராகவுள்ள போது கிழக்கின் இலக்கிய விழா துண்டாடப்பட்டமையானது பெரும் கவலைக்குரிய நிகழ்வாகப் போய்விட்டது.

ஒன்றுமையும், மொழிப் புரிந்துணர்வுமற்ற சமூகத்தினை அழிக்க யாரும் தேவையில்லை. பதவியாசை கொண்ட எம்மிற் சிலரே எம்மை பச்சையாகத் தின்னட்டும். மற்றவர்கள் அதைப் பார்த்தும் பார்க்காமற் போகப் பழகிக்கொள்ள வேண்டும் எனும் உங்களின் நடத்தை உங்களையும் பாதிக்கும் அல்லவா? யுத்தம் முடிந்தவுடன் எமக்கு எல்லாம் முடிந்துவிட்டது என்பது அர்த்தமல்ல. இப்போது தான் 'எமது' என்ற ஒவ்வொரு விடயத்தின் மீதும் தீராத அவாக் கொண்டவர்களாக நாம் மாற வேண்டும். இக்கணத்தில் நான் இஸ்ரேலிய மனிதர்களை நினைவுகொள்கின்றேன். அவர்கள் தமக்கென எதுமில்லாதவர்களாக விரட்டியடிக்கப்பட்ட பின் தமக்கான எல்லாவற்றையும் பெற்றுக்கொள்ளவில்லையா?

நிலத்தை மீட்கும் நாள் வரலாம். அதுவரை மொழியை மீட்போமே நாம். வருகின்றீர்களா........?

-ஆசிரியர்-

# திருக்கோணமலை வலயப் பாடசாலைகளின் உலக உளநல தினம் — 2012

"மனச்சோர்வு ஓர் உலகளாவிய நெருக்கடி" என்னும் கருப்பொருளில் திருக்கோணமலை வலயப் பாடசாலைகளின் உலக உள நல தினம் 10.10.2012 காலை 9.15 அளவில் தி/விக்னேஸ்வரா மகா வித்தியாலத்தில் அதிபர் திரு.சீ. மதியழகன் தலைமையில் ஆரம்பமானது.

இந்நிகழ்வில் தி/விக்னேஸ்வர மகா வித்தியாலயம், தி/ ஸ்ரீ சண்முக இ.ம.க, தி/ புனித பிரான்ஸிஸ் சவேரியர் ம.வி, தி/ ஸாகிறா மு.ம.வி ஆகிய பாடசாலைகளின் மாணவர்களும், ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.

. அதிபர். திரு.சீ.மதியழகன், சிறப்பு விருந்தினர் திரு.S.அரிதரன் (உளவள நிலைய உதவி முகாமையாளர், மாகாண கல்வித்திணைக்களம்) கௌரவ விருந்தினர் திரு.K.நளினகாந்தன் (ஆசிரியர் தி/புனித சவேரியார் ம.வி) திரு.A.M. அமீன் (ஆசிரிய ஆலோசகர், வழிகாட்டலும் ஆலோசனையும்) திரு.ஆ.உதயகுமார் (தொழில் வழிகாட்டல் உத்தியோகத்தர்) ஆகியோர் வரவேற்கப்பட்டனர்.

முதல் நிகழ்வாக மங்கள விளக்கிற்குச் சுடர் ஏற்றும் வைபவம் இடம் பெற்றது. அதைத்தொடர்ந்து 'சீர்மையர் கீதம்' இசைக்கப்பட்டது.

திரு.A.M.அமீன் அவர்களின் வரவேற்புரை இடம் பெற்றது.

தொடர்ந்து அதிபர் திரு.சீ. மதியழகனின் தலைமையுரை இடம் பெற்றது அவர் நேரான நல்ல விடயங்களைச் செய்யும் போது மட்டுமே அனைவரும் மனச்சோர்வு இல்லாதவராக வாழமுடியும் என்ற கருத்தினை முன்வைத்தார்.

திரு.K.நளினகாந்தன் தமது உரையில் பிறந்தநாள், திருமணநாள் போன்றவற்றை பெரிய விழாவாகக் கொண்டாடுவதை விடுத்து வாழ்வை ஒரு லட்சியத்தோடு எதிர்கொள்ள வேண்டும் எனவும் "மாற்றம் இல்லாத எதுவும் நிலை பெறாது. மாற்றம் என்ற ஒன்றைத் தவிர ஏனையவை எல்லாம் மாறிக் கொண்டேயிருக்கின்றது" என்றும் கூறினார்.

தொடர்ந்து சிறப்புவிருந்தினர் திரு. அரிதரன் அவர்கள் தமதுரையில் எமது நடத்தைக்குக் காரணம் யாது? எமது மனதை எம்மால் பார்க்கமுடியுமா? என்பவை பற்றிய விளக்கங்களை விடுத்தார். "எங்களை ஆள்பவை எமது எண்ணங்கள் அந்த எண்ணங்கள் சார்ந்தது தான் எமது நடத்தை. ஆகவே மனதை எமது கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும்" என்றார்.

இறுதியாக திரு.M.உதயகுமாரின் நன்றியுரை இடம் பெற்றது. 'மனச்சோர்வு' எம்மை எமது எண்ணங்களை அழித்துவிடும். எல்லோரும் ஏதோ ஓர் வகையில் மனச்சோர்வு உடையவர்தான். ஆனால் அம்மனச் சோர்விலிருந்து விரைவாக விடுபட்டு காரியமாற்ற முனைபவர்களே வெற்றியடைகின்றார்கள் எனக் கூறி அமர்ந்தார். காலை 11.00 மணியளவில் நிகழ்வுகள் யாவும் இனிதே நிறைவேறின.

## திருத்தம்:

கடந்த வார இதழில் வெளியான செய்தியொன்றில் திருகோணமலை வளாக கல்வி நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பது தொடர்பான எவ்வித அறிவிப்பையும் வளாகத்தின் கணணி விஞ்ஞான கற்கைநெறி இணைப்பாளர் தெரிவிக்கவில்லை என்பதை வாசகர்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றோம்.

## ஆசிரியர் தின சிறப்பு நிகழ்வு

மூதூர் மல்லிகைத்தீவு மகாவித்தியாலயத்தின் 2012ம் ஆண்டிற்கான சர்வதேச ஆசிரியர் தினம் 10.10.2012 புதன்கிழமை மல்லிகைதீவு மகாவித்தியாலய மண்டபத்தில் திருக்கோணமலை கிளையின் பழைய மாணவர்கள் சங்கத்தலைவர் இ.கலைச்செல்வன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு மூதூர் வலயக்கல்விப் பணிமனையின் திட்டமிடல் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் திரு. ஆ.செல்வநாயகம், பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக பாடசாலை அபிவிருத்திச் சங்க குழுவின் செயலாளர் திரு. நா. தயாபரன் மற்றும் அதிபர்கள், பழையமாணவர்கள், பாடசாலை அபிவிருத்திக் குழுவினர், பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், கிராமத்தைச் சேர்ந்த நலன் விரும்பிகள் ஆகியோர் பங்கேற்றனர்.

அங்கு ஆசிரியர்களும் பாலர் பாடசாலை ஆசிரியர்களும் பழைமாணவர்கள் சங்கத்தினால் கௌரவிக்கப்பட்டார்கள். அவர்களுக்கு மாலை அணிவித்து ஞாபக சின்னங்களும் வழங்கப்பட்டன.

மேலும் 2012 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள், பொறுப்பாசிரியர், ஆகியோரும் பாரட்டப்பட்டனர். தலைமைமையுரையை பழைய மாணவர் சங்கத்தலைவர் இ.கலைச்செல்வன் ஆற்றினார். பிரதம விருந்தினர் உரை நிகழ்த்திய போது தற்போதைய அதிபர் தலைமையில் இந்தப் பாடசாலை முன்னேற்றம் கண்டு வருவதாகவும் அது தொடரவேண்டும் எனவும் வாழ்த்தினார்.

# இலங்கைப் புத்தாக்கக் கண்காட்சியில் ஸ்ரீவாணி வித்தியாலயம்



திருக்கோணமலை ஸ்ரீ வாணி வித்தியாலயம் இம்முறை தனது வரலாற்றில் முதல்முறையாக இலங்கைப் புத்தாக்கக் கண்காட்சியில் சான்றிதழை வென்றுள்ளது. அப்பாடசாலையில் தரம் 8 ல் கல்விபயிலும் மாணவர்களான ப.டனுராஜ், ம.மதுசன் ஆகியோரின் மாதிரிக் குளிருட்டிக்கே புத்தாக்கக் கண்காட்சிச் சான்றிதழ் கிடைத்துள்ளது. ஸ்ரீவாணி வித்தியாலய விஞ்ஞான ஆசிரியை திருமதி.இ.இராஜமணியின் வழகாட்டலில் இம் மாதிரிக் குளிரூட்டியை மாணவர்கள் உருவாக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஔவையார் வீதிச் சந்தியில் முத்தம்



ஸ்கூட்டி மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடனொன்று முத்தமிட்டுக் கொண்டதால் இளைஞர்கள் இருவர் சிறுகாயங்களுக்குள்ளாகிய விபத்தொன்று ஔவையார் வீதிச் சந்தியில் 10.10.2012ல் ஏற்பட்டுள்ளது. உட்துறைமுக வீதியில் பெரிதாக்கும் வேலைகள் நடைபெறுவதால் போக்குவரத்து நெரிசில்களுக்கு அடிக்கடி உள்ளாகும் திருஞானசம்பந்தர் வீதியில், ஔவையார் வீதியூடாக வந்த ஸ்கூட்டியொன்று திருஞான சம்பந்தர் வீதியால் வந்த ஸ்கூட்டியொன்றுடன் முட்டிக்கொண்டது.

# திருமலைத் தபாலகத்தில் "உலக தபால் தினம்"



உலக் தபால் தினத்தை முன்னிட்டு கடந்த ஒக்டோபர் 9ம் திகதி விசேட நிகழ்வொன்று திருகோணமலை பிரதான தபால் நிலையத்தில் இடம் பெற்றது. காலை 8.30 மணிக்கு ஆரம்பமான இந்நிகழ்வு திருக்கோணமலை பிரதான தபால் அதிபர் திரு.விஜயகுமார் தலைமையில் இடம்பெற்றது. "தபால் உங்கள் அறிவின் எல்லையை விசாலமாக்கும்" என்ற தலைப்பில் இந்நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வின் போது, தபால் துறையில் அகில இலங்கை ரீதியில் தேசிய விருதினை தட்டிச்சென்றவர்கள் கௌரவிக்கப் பட்டனர்.

திருக் [illegible] தபால் நிலை [illegible] உத்தியோகத்தர் திரு.முருகையா ரவிந்திரனாந் மற்றும் காரியாலய சேவகர் திரு. செல்லையா கேதீஸ்வரன் ஆகியோர் தமது பிரிவுகளில் அகில இலங்கை ரீதியில் தேசிய விருது வழங்கும் நிகழ்வில் முதல் இடங்களைப் பெற்று திருமலைக்கு பெருமைச் சேர்த்தனர்.

அத்துடன், கோளவுடை ஊழியர் திரு. கோபாலபிள்ளை பிரசாந்தன் தனது பிரிவில் அகில இலங்கை ரீதியில் தேசிய விருது வழங்கும் நிகழ்வில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டார்.

மேலும், இவ்வருடம் நடைபெற்ற ஐந்தாம் ஆண்டு புலமை பரிசில்

(10ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகநூலில் ஒரு வாக்குமூலம்

-சென்றவார தொடர்ச்சி-

எனக்கு இன்றும் நல்ல நினைவிருக்கிறது. ஒவ்வொரு முறை தங்கர்மாமாவுடனான எமது சம்பாஷணையை எங்கள் அம்மாக்களில் ஒருவர் வந்து 'டேய் தங்கர் நீ கெட்டுக் குட்டிச்சுவரானது போதாதெண்டு ஏன்ரா இவங்களையும் கெடுக்கிறாய் என்று விட்டு எங்களைப் பார்த்து அவனுக்குத்தான் வேலை வெட்டியில்லை சும்மா கூட்டம், பேச்சு எண்டு சுத்துகிறான் நீங்களும் அவனைப் போல வராமல் போங்கோ போய் அங்கால் விளையாடுங்கோ என்று அதட்டுவதில் முடியும். ஓம் ஓம் என்று சிரிக்கும் அவர் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் நல்ல பெருந்தன்மையான சிந்தனைகளையும் எம்முள் தூண்டவேண்டும் என்பதிலும் மிக முனைப்பாக இருப்பார். மிகவும் எளிமையாகவும், ஒரு விதமான பிடிவாதத்துடனும் இருந்த தங்கர் மாமாவுக்கு திருமண வயதாகியும் திருமணம் நடக்கவில்லை. நான் புலம் பெயரும் வரை அதே உடுப்பு, அதே செருப்பு, அதே பிரமச்சாரி அதே தங்கர் தான்.

புலம் பெயர்வுக்குப் பிறகு சொந்தங்கள் பந்தங்கள் எல்லாம் திக்குத்திக்காய் திசையெங்கும் சென்றபின் தொடர்புகள் எல்லாம் முற்றாக இல்லாமல் போன கால கட்டத்தில் எனது தந்தையுடன் தொலைபேசும் வேளைகளில் தங்கரைப் பற்றிக் கேட்பதுண்டு. அப்பா சொல்லுவார். அவன் திருக்கோணமலையில் இருக்கிறான் எனத் தெரியும், ஆனால் தொடர்பில்லை' எப்படியாவது அவரின் தொடர்பை எடுத்துத்தாருங்கோ என்றுவிட்டு இந்த வேகமான வாழ்க்கையில் நானும் மறந்து விடுவேன். முதுமையோ என்னமோ எனது தந்தையும் மறந்துவிடுவார். இப்படி ஒரு நிலமையில் தான் முகப்புத்தகம் மூலம் நந்தினி சேவியராகக் காணப் பெற்று பெருமகிழ்ச்சியடைந்தேன்.

அன்று சொந்தங்களாலும் பந்தங்களாலும் புரிந்து கொள்ளப்படாத எங்களின் தங்கர்மாமா இப்போ நந்தினி சேவியராக இலக்கிய உலகில் எல்லோராலும் அறியப்பட்டவராக பெரு வளர்ச்சியடைந்துள்ளதைக் காணும் போது பெருமையாக இருக்கிறது. அன்று சிறுவர்களான எமக்கு மாரக்சியர்தின் பாலும் லெனினிசத்தின் மேலும் ஈர்ப்பு ஏற்பட்டு ஒரு காலத்தில் அவற்றை படிக்க தலைப்பட வேண்டும் என்பதற்கான உந்துதலை ஏற்படுத்தும் உரையாடல்களாகவே எம்மீதான அவரது கேள்விகள் அமர்ந்திருந்ததை இப்போ உணர்கிறேன். அவரது படைப்புக்களின் தொகுப்பான 'நெல்லி மரத்துப் பள்ளிக்கூடம்' என்ற சிறுகதைத் தொகுப்புக்கு இலங்கையின் பேர்பெற்ற பதிப்பகமான கொடகே பதிப்பகம் எனது இன்னொரு மாமனான கே.டானியலின் பெயரால் விருது வழங்கிக் கௌரவித்ததில் இரட்டிப்பு மகிழ்ச்சி எனக்கு.

அவருக்கு கிடைத்த மிகப்பெரிய அங்கீகாரமாக அவரின் சிறுகதை, இலங்கைப் பாடப்புத்தகம் ஒன்றில் பாடமாக உள்ளதாகக் கேள்வியுற்ற போது சிறுவர்களாக இருந்த எமக்கு அவர் சொல்ல வந்த நல்லவைகளை இனிமேல் எந்தத்தடையுமின்றி இலட்சக்கணக்கான மாணவர்களுக்கு அவர் சொல்லப்போவதை நினைத்து பெருமைப்படுகிறேன்.



-நந்தினி சேவியர்-

தங்கர்மாமா வாழ்க்கையில் எவ்வளவோ வேதனைகளையும் சோதனைகளையும் சந்தித்துள்ளார். பெரிய இழப்புக்கள் அவருக்கு ஏற்பட்டுள்ளதை அறிந்து வேதனைப்படுகிறேன். ஆனால் ஒன்று மட்டும் எனக்கு உறுதியாகத் தெரியும். இவை எவையும் அவரை தளரச் செய்ய முடியாது. ஏனென்றால் எழுத்துக்கு மட்டுமல்ல, அவர் உண்மையாகவே மார்க்சியவாதியாக வாழ்பவர். இதை அந்நாட்களில் கண்கூடாகக் கண்டவன் நான். ஒரு சிறந்த படைப்பாளி எவ்வளவு சோதனைகள் ஏற்பட்டாலும், எவ்வளவு தடைகள் ஏற்பட்டாலும் அவையெல்லாவற்றையும் தாண்டி வெளிவருவான் என்பதற்கு, இரத்த சொந்தங்களாலேயே ஒரு காலத்தில் அங்கீகரிக்கப்படாத தங்கர் என்கிற நந்தினி சேவியரின் வாழ்க்கையும், வெற்றியும் நல்லதோர் எடுத்துக்காட்டு வாழ்க தங்கர் மாமா. Congrats and All the best

-கலைச்செல்வன் றெக்கி அமிர்-

இதுதான் என் இளைய நண்பர்களே எனது அன்றைய வாழ்க்கை. இன்றைய வாழ்க்கையும் கூட. எனவே அலட்சியங்களை பெரிது படுத்தாது, அகம்பாவத்தைத் தவிர்த்து முன்னேற முயலுங்கள். இப்போது இல்லாவிட்டாலும் 64 வயதிலாவது (என்னைப் போல்) கவன ஈர்ப்புக்கு உள்ளாவீர்கள் நிச்சயம்.

## மோசடியான முகவர் நிலையமா?

நீங்கள் பயணம் செய்யவிருக்கும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையம் மோசடியற்றதா எனக் கண்டுபிடிக்க இலங்கை அரசின் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பின்வரும் இலக்கத்திற்கு அழைப்பை ஏற்படுத்துங்கள் 011-864109

## டெக்னோ 2012

தேசிய எந்திரவியல் தொழிநுட்பக் கண்காட்சியொன்று ஐப்பசி மாதம் 12, 13, 14ம் திகதிகளில் பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. இலங்கைப் பொறியியலாளர் நிறுவனம் நடாத்தவுள்ள இக் கண்காட்சியில் வாகன உதிரிப்பாக வழங்குனர்களும் பங்கு பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முயற்சி திருவினையாக்கும்

-யசோதினி-

அது மிகவும் ஆழமான கடல். அந்தக் கடலின் மேற்புறம் எப்போதும் அமைதியாகத்தான் இருக்கும் ஆனால் கடலின் அடியில் எப்போதுமே மீன்களின் ஆடலும் பாடலும் நடந்து கொண்டே இருக்கும். அந்தக் கடல் பகுதியில் ஏராளமான கடல் உயிரினங்கள் வாழ்கின்றன. ஒன்றுக்கொன்று ஒற்றுமையாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்கின்றன. அந்தக்கடலில் எதிரிகளே இல்லை.

இவ்வாறான ஒரு அழகான இடத்தில் தான் 'கிரு' என்ற ஒரு சிறிய மீன் வசித்துவந்தது. பாவம் அதற்கு அம்மா, அப்பா இல்லை இதனால் தனியாகத்தான் வாழ்ந்து வந்தது. கிருவிற்கு நிறைய நண்பர்கள் இருந்தனர். அவர்கள் அனைவரும் மகிழ்ச்சியாக விளையாடிக் கொண்டிருப்பார்கள். கிரு அதனைப் பார்த்துக் கொண்டிருப்பான். ஏன்...? கிரு அவர்களுடன் விளையாடலாம் தானே....? கிருவுக்கு விளையாடத்தான் ஆசை ஆனால் முடியாது. ஏன் தெரியுமா? கிருவுக்கு பிறந்ததிலிருந்தே வாலில் ஒரு பகுதி இல்லை. இதனால் கிருவால் சரியாக நீந்த முடியாது. கிருவின் நண்பர்கள் இதனைப் பார்த்து கவலைப்பட்டனர். கிருவிற்கு இதனை பார்க்க முடியவில்லை. இதனால் அவன் வீட்டை விட்டு வெளியில் வருவதே இல்லை.

கிருவின் இந்த செயலை நீண்ட நாளாக ஈசா என்ற ஒக்டாபஸ் பார்த்துக் கொண்டு வந்தது. ஒரு நாள் 'கிரு' வின் நண்பர்கள் விளையாடி முடித்துவிட்டு வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தனர். கிரு அதனைப் பார்த்துக் கொண்டிருந்தது.

'நீ விளையாடச் செல்லவில்லையா....?' என்று ஒரு குரல் கேட்டது. கிரு யார் என்று திரும்பிப் பார்த்தான். அது ஈசா. 'இல்லை ஈசா.... என்னால் சரியாக நீந்த முடியாது என்று தெரியும்தானே....' என்று கிரு




சொன்னான். 'யார் உனக்கு நீந்த தெரியாது என்று சொன்னது..' என்று ஈசா கேட்டது 'யார் சொல்ல வேண்டும்....? எனக்குத்தானே வாலில் ஒரு பகுதி இல்லை இப்படியிருக்க என்னால் எப்படி நீந்த முடியும்...? என்று சொன்னான் கிரு. கிரு சொல்வதைக் கேட்ட ஈசாவுக்கு கிருவை பார்க்க கவலையாக இருந்தது. கிருவுக்கு தன்னம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும் என்று ஈசா நினைத்து உடனே சிரித்தது. அதனைப் பார்த்த கிரு 'ஏன் ஈசா என்னைப் பார்த்து சிரிக்கிறீர்கள்...? பார்த்தீர்களா என்னை பார்க்க உங்களுக்கே சிரிப்பு வருகிறது...' என்றது. இதனைக் கேட்ட ஈசா அட முட்டாள் மீனே வாலில் ஒரு சிறு பகுதி இல்லை என்பதற்காக நீந்த தெரியாது என்கிறாயே.....என்னைப் பார் எனது உடம்பில் எங்காவது நீந்துவதற்கு துடுப்பு உண்டா நான் நீந்துவதைப் பார்....' என்று சொல்லி நீந்திக் காட்டியது.

கிருவுக்கு ஈசா நீந்துவதைப் பார்த்து ஆச்சரியமாக இருந்தது. உடனே கிரு "ஆம் ஈசா வாலோ, துடுப்போ இல்லாமல் உங்களால் நீந்தமுடிகிறது" "எவ்வாறு நீந்தினீர்கள் என்று எனக்கும் சொல்லித்தாருங்களன்" என்றது. அதற்கு ஈசா "இது ஒன்றும் பெரிய விடயமில்லை. நான் பலதடவை நீந்த முயற்சி எடுத்தேன். அதன் பலனாக என்னால் நீந்த முடிந்தது... நீயும் முயற்சி எடு உன்னாலும் நீந்த முடியும்".... என்றது.

'நிச்சயம் நான் முயற்சிப்பேன்...' என்றது கிரு. அதைக் கேட்ட ஈசாவுக்குச் சந்தோஷமாக இருந்தது. அடுத்த நாள் காலையில் கிரு தனது துடுப்பினால் மெதுவாக நீந்த தொடங்கியது. பலதடவை வாலின் ஒருபகுதி இல்லாததால் நீந்த முடியாமல் கீழே விழுந்தது. மீண்டும் மீண்டும் முயற்சி செய்தது.

கிருவின் இந்த செயலை கண்ட மற்றைய மீன்கள் கிருவை கேலி செய்தன. கிருவிற்கு அழுகையே வந்தது. ஆனால் விடாப்பிடியாக கிரு மெல்ல மெல்ல நீந்த முயற்சி செய்தது அதற்கு கிருவின் நண்பர்கள் உதவி செய்தனர். நீண்ட முயற்சிக்குப் பின் கிரு சாதாரணமாக ஏனைய மீன்களைப் போல நீந்தத் தொடங்கியது. அப்போது ஈசாவை தாண்டிச் சென்ற கிரு 'நான் இவ்வாறு நீந்துவதற்கு நீங்கள் தான் காரணம் உங்களுக்கு நன்றி' என்றது.

அதனை கேட்ட ஈசா " கிரு உனது இடைவிடா முயற்சியே வெற்றிக்குக் காரணம்" என்றது. கிரு மீனுக்கு 'முயற்சி திருவினையாக்கும்........' என்பது அப்போதுதான் புரிந்தது.

## அதிபர் க.யோகானந்தம் அவர்களுக்கு 'ஆசிரியர் பிரதீபா பிரபா' விருது




2012 ஆம் ஆண்டுக்கான 'ஆசிரியர் பிரதீபா பிரபா' விருதை தி / லிங்கநகர் கோணலிங்க வித்தியாலய அதிபர் க.யோகானந்தம் பெற்றுக் கொண்டார்.

09.10.2012 மீபேகல்வி முகாமைத்துவ அபிவிருத்தி நிலையத்தில் இடம்பெற்ற நிகழ்வில் இவ்விருது வழங்கல் விழாவில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்துகொண்டு விருதுகளை வழங்கி வைத்தார். இதே வேளை விருதுபெற்ற அதிபருக்கு கோணலிங்க வித்தியாலய ஆசிரியர்களும் மாணவர்களும் பாராட்டு வைபமொன்றை 10.10.2012 அன்று முன்னெடுத்திருந்தனர். திரு.க.யோகானந்தன் அவர்கள் 2006 இல் அரசின் கவிதைக்கான சாகித்திய விருதை பெற்றிருந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கன்னி அமர்வும் கற்றுக்கொள்ளும் பாடங்களும் !

இரண்டாவது கிழக்கு மாகாண சபையின் கன்னி அமர்வுகள் 01.10.2012ல் ஆரம்பித்து 02ம் திகதியுடன் ஒத்தி வைக்கப்பட்டது. அனைத்து மாகாண சபை உறுப்பினர்களும் பங்கேற்ற இக் கன்னி அமர்வின் முதலாவது வாக்குமூலமே " திவிநெகும சட்ட மூலத்தை " ஏற்றுக் கொள்வதா? இல்லையா என்ற விடயம் தொடர்பானதாய் அமைந்திருந்தது. மொத்தம் 36 வாக்குகளில் சட்டமூலத்திற்கு ஆதரவாக 21 வாக்குகளும் எதிராகப் பதினைந்து வாக்குகளும் விழுந்ததால் சட்ட மூலத்தை கிழக்கு மாகாண சபை 6 கூடிய வாக்குகளால் ஏற்றுக்கொள்வதான அறிவித்தல் வெளியானது.

இங்கு அரசியல்வாதிகளின் கதைகளைத் தவிர்த்துக் கவனிக்க வேண்டிய விடயம் யாதெனில் திவிநெகும சட்டமூலத்தை பாராளு மன்றில் நிறைவேற்ற வேண்டுமாயின் முதலில் மாகாண சபைகள் அச் சட்டத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என ஏன் மீயுயர் நீதிமன்றம் தீர்ப்பளித் திருந்தது என்பதே? அத் தீர்ப்பு பூடகமாக எதைச் சொல்கின்றது எனில் திவிநெகும சட்ட மூலம் மாகாண சபைகளின் அதிகாரங்களை மத்திய அரசிற்கு ஏதோவோர் வழியில் மீளத் தாரைவார்க்கின்றது எனும் உண்மையையே. திவிநெகும சட்ட மூலமானது அரசியலமைப்பின் மாகாண சபைகளின் அதிகாரப் பட்டியலின் கீழுள்ள பலவிடயங்களை மத்திய அரசின் திணைக்களமொன்று கையாளத் துணிகின்ற விடயமாகவே உள்ளது என மீயுயர் நீதிமன்று கருதுகின்றது. இதனடிப்படையில் சுமார் 16 விடயங்களை மாகாண சபையிலிருந்து மத்திய அரசிற்குத் திருப்பித்தரப் போகின்றது என 'லால் விஜயநாயக்க' எனும் கல்வியாளர் தெரிவித்துள்ளார். மேலும் அவர் இச்சட்ட மூலத்தை ஏற்றுக்கொள்ளும் மாகாண சபைகள் யாவும் தமது காலைத் தாமே வெட்டிக்கொள்ளும் என அடைமொழியுமிட்டுள்ளார்.



ஆயின் எட்டு மாகாண சபைகளும் தமது கால்களை வெட்டிக் கொண்டுள்ள நிலையில் இப்பொது இச் சட்ட மூலத்தை நிறைவேற்றத் தடையாகவுள்ள ஒரேயொரு மாகாண சபையாக வடக்கு இருக்கின்றது. ஏனெனில் அங்கு மாகாண சபை இல்லை என்பதுடன் மாகாண சபை இருந்தால் நிச்சயமாக சட்டமூல ஆதரவை அரசால் அங்கு பெற்றுக் கொண்டிருக்கவும் முடியாது என்பதும் உண்மையாகும். தற்போது அரசு வடமாகாண சபையின் நிறைவேற்று அதிகாரியான ஆளுனரிடம் அனுமதியைப் பெற்று அச் சட்ட மூலத்தைப் பாராளுமன்றில் சமர்ப்பித்து வெற்றி பெறச் செய்யும் முயற்சியில் இறங்கியுள்ளது. அதனைத் தடுக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வழக்கொன்றைத் தாக்கல் செய்துள்ளது. அவ்வழக்கு வெற்றிபெறுமாயின் வடக்கில் மட்டும் திவிநெகும சட்ட மூலம் அமுலாக்கப்படாமலிருக்குமே தவிர ஏனைய எட்டு ஊனமான மாகாண சபைகளிலும் அச் சட்டமூலப் பிரயோகம் மத்தியிலிருந்து நிகழத்தான் போகின்றது.



கிழக்கு மாகாண சபையின் முதலாவது அமர்வின் முதலாவது மசோதாவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்த்து வாக்களித்திருந்த போதும் முஸ்லிம் காங்கிரசின் அனுசரணையுடன் இச்சட்ட மூலம் நிறைவேறி விட்டது. அதாவது தனது கன்னி முயற்சியிலேயே கிழக்கு மாகாண சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தோல்வியடைந்துள்ளது. இத் தோல்வியிலிருந்து கிழக்கின் தமிழர்கள் கற்றுக் கொள்ளும் முக்கிய பாடத்தையே நாம் ஆராய வேண்டும்.

திவிநெகும சட்ட மூலத்திற்கான ஆதரவைத் தெரிவித்த கிழக்கு மாகாண சபையின் முடிவானது முதலாவது எச்சரிக்கையை தமிழருக்கு விடுத்துள்ளது. அவ்வெச்சரிக்கை யாதெனில் தமிழருக்குத் தீங்குருவாக்கும் எந்தத் தீர்மானமும் கிழக்கு மாகாண சபையில் கொண்டுவரப்படவோ அவை வெற்றியடையவோ முடியும் என்பதாகும். அப்படியாயின் அவையில் அங்கம் வகிக்கும் எதிர்க்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எதிர்ப்பு வாக்குகளின் வலுவென்ன எனும் கேள்வி எம் முன் நிற்கிறதல்லவா? அவை எவையும் செய்ய முடியாத நிலையிலுள்ளன என்ற கசக்கும் உண்மையை நாங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

அப்படியாயின் தமிழருக்குத் தீங்குருவாக்கும் விடயங்களை கிழக்கு மாகாண சபை முன்மொழியும் போது எவ்வாறு சாதாரண மக்கள் எதிர்ப்பது? என்பதும் தமது எண்ணங்களை எவ்வாறு வெளியிடுவது என்பதும் கிழக்கு வாழ் தமிழருக்கில்லாத விடயமாகப் போய்விட்டது. இக் கணத்தில் தமிழர்களின் தலைவர்களாக தம்மை வெளிக்காட்டிக் கொள்ளும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் முன்னுள்ள முக்கிய கடமையாக தமிழர்களைக் கிழக்கில் ஒன்றாக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப் படவேண்டிய தேவை முக்கியமாக எழுந்துள்ளதைக் காணலாம். அவ்வாறு முன்னெடுக்கப்படும் போது உருவாகும் கிராமிய மட்டக் குழுக்களே தமது எதிர்ப்பைக் காத்திரமாக உலகிற்கு இயம்பும் பொறி[illegible] விடுகின்றன. [illegible] எவை எமக்குத் தீங்கானவை என்பதைப் பற்றிய தெளிவை அம் மக்களுக்கு வழங்கவேண்டிய கடமைப் பாட்டையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கொண்டுள்ளது.

எனில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மட்டுமே இக் கடமையுள்ளதா அல்லது கிழக்கின் மற்றைய தமிழ்க் கட்சியான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளுக்கும், தமிழ் பேசும் முஸ்லிம் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் முஸ்லிம் காங்கிரஸிற்கும் இக் கடமையில்லையா? எனும் கேள்வி எழலாம். இதற்கான விடையாக அவர்கள் தமது கட்சியினுடைய நோக்கத்தைத் தெளிவாக மக்கள் முன்னே சொல்லியிருக் கின்றார்கள் என்பதை நாம் இங்கு கவனத்திற் கொள்ள வேண்டும். அரசுடன் இணைந்து, அவ்வரசிலிருந்து பெற்றுக் கொள்ளக் கூடியவற்றினூடாக மக்களுக்குச் சேவையாற்றல் என்பதே அவ்விரு கட்சிகளினதும் நோக்கமாக இருக்கின்றமையால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே தமிழருக்குத் தீங்கு தரும் விடயங்கள் தொடர்பாக தமிழரை, தமிழ் பேசும் மக்களைத் தெளிவுபடுத்த வேண்டிய தேவையைக் கொண்டிருக்கின்றமையை உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஆனால் உறுதியான தீர்மானம் எடுத்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எப்போதுமே ஆட்டங்கண்டு கொண்டே வருகின்றமையை கடந்தவார அரசியல் நிலைமைகள் வெளிக்காட்டியிருந்தன. அதாவது இந்தியாவிற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சுவார்த்தைக்குச் செல்ல முதலே தேசியப் பத்திரிகைகள் யாவும் இரண்டு விடயங்கள் நிகழவிருப்பதாக தகவல்களை வெளியிட்டன. அவை முறையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது அரசுடன் பேச்சுவார்த்தைக்குத் திரும்பப் போவதாகவும், பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்கப் போவதாகவும் வெளியான தகவல்களே. இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்குடனான பேச்சுவார்த்தையை முடித்துக்கொண்டு சனாதிபதி ராஜபக்ஸ திரும்பியவுடனேயே அடுத்து இந்தியாவிலிருந்து தம்ழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு அழைப்பு வரும் எனப் பரவாலாக எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அங்கு பேசிய பின் வெளியாக வேண்டிய முடிவுகள் இரண்டும் எவ்வாறு பேசமுதலே வெளியாகின என்பது கேள்விக்குறியாகிப் போனதுடன் முடிந்த முடிவுக்கான பேச்சுவார்த்தைக்கா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தியா செல்கிறது எனும் கேள்வி குறியாகி நிற்கின்றது.

இங்கு உறுதியான தீர்மானமெடுத்தலில் எங்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தளம்புகின்றது எனப் பார்த்தால் அரசுடனான பேச்சுவார்த்தையிலிருந்து ஏன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வெளியெறியது என்பதும் அவ்வாறு வெளியேறிய போது என்ன விடயம் இனி நிகழ்ந்தால் தாம் அரசுடன் மீளப் பேச்சுக்குப் போகத் தயாராகவுள்ளோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளியிட்ட விடயங்களில் யாதாயினும் ஒன்றாவது தற்போது நிகழ்ந்து விட்டதால் அவ்வமைப்பு பேச்சுவார்த்தைக்குச் செல்லத் தயாராகி விட்டதா? எனும் கேள்வி எழுவது தவிர்க்க முடியாதுள்ளது. ஆனால் 25.09.2012 அன்றும் திரு சம்பந்தன் அவர்கள் அரசுடன் பேச்சுக்குத் [illegible] எழுத்தில் எமக்களிக்க [illegible] வாக்குறுதிகள் யாவும் நிறைவேற்றப்பட்டாலே அது நடக்கும் என உறுதிபடத் தெரிவித்திருப்பதன் ஊடாக அவ் வாக்குறுதிகளில் ஒன்றுமே செம்டெம்பர் மாதக் கடைசிவரை நிகழவில்லை என்பதைத் தெரிந்து கொள்ளலாம். ஆனாலும் இந்தியா வாக்குறுதிகளைப் பற்றிய கவலையின்றி தெரிவுக்குழுவிற்குத் திரும்புமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது முதலாவது அழுத்தத்தை இவ்வாண்டின் யூலை மாதம் யாழப்பாணத்தில் வைத்து தனது இராசதந்திரி ஸ்ரீகாந்தா ஊடாக முன்வைத்திருந்தது. அப்போது அதனை வன்மையாக இல்லாவிட்டாலும் சாதாரணமாகக் கூட மறுக்காமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நழுவி வெளியே வந்த பின் தனது அறிக்கைகளூடாக அதற்கு மறுப்புத் தெரிவித்திருந்தது. அதற்கும் சில நாட்களுக்கு முன்னரே சிவ்சங்கர் மேனனுடனான பேச்சுக்களின் பின் திரு.சம்பந்தர் தாம் தெரிவுக்குழுவில் இணைவது தொடர்பாகவும், அரசுடன் பேச்சுக்குப் போவது தொடர்பாகவும் விவாதித்ததாக தெரிவித்திருந்தார்.

ஆனால் இம்முறை இந்தியாவிற்கு அழைக்கப்பட்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதன் பிரதமருடனான சந்திப்பின் போது தெரிவுக்குழு சார்பாக விட்டுக்கொடுக்காத போக்கையே கொண்டிருந்ததாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன. எனினும் தெளிவாக நாம் புரிந்து கொள்ள வேண்டிய விடயம் யாதெனில் யாதாயினும் ஒரு திட்டத்திலல்லாமல் இந்தியா தமிழ்த்



தேசியக் கூட்டமைப்பைப் பேச்சுக்கு அழைத்திருக்காது என்பதையே. முன்னரே இராஜபக்ஸவுடன் பேசியுள்ள மன்மோகன்சிங் அரசு தற்போது எவ்வாறாயினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது அழுத்தமொன்றைக் கொடுக்க விரும்புமேயொழிய வெறுமனே பேசிவிட்டுத் திரும்பி வர விடப்போவதில்லை. ஏனெனில் இலங்கையுடனான ஏற்றுமதி வர்த்தகத்தினூடாக தனது மொத்த ஏற்றுமதி வருமானத்தில் சுமார் 20 வீதத்தை உழைத்துக் கொள்ளும் சனநாயகத் தோல் போர்த்த ஏகாதிபத்தியம் நியாயத்தின் பக்கமா பணத்தின் பக்கமா நிற்கப் போகின்றது? அல்லது நின்றது என்பது பற்றி நான் உங்களுக்குச் சொல்லித் தெரியவேண்டியதில்லை.

எனவே கிழக்கு மாகாண சபையின் கன்னி அமர்வு கிழக்கு வாழ் தமிழர்கள் தமது நியாயமான கோரிக்கைகளுக்கான போராட்ட வடிவமொன்றைத் தேடிக்கண்டு கொள்ள வேண்டும் என்னும் பாடத்தை பறைசாற்றியுள்ளது. அவ் வடிவம் எது என்பதையும் அதை எவ்வாறு வலியின்றி முன்னெடுக்க வேண்டும் என்பதையும் தமிழ்த் தலைமைகள் கண்டு கொள்ளவில்லையாயின் கால மாற்றத்தில் முஸ்லிம் காங்கிரசின் முடிவு சரியானதாக தென்படும் வாய்புண்டு.

மாயன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலையில் "கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய விழா" ஆய்வரங்கு

## காய்தல் உவத்தலற்ற ஓர் மீள்பார்வை




ஐப்பசி 06ம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரை இரு அமர்வுகளாக கிழக்கு மாகாணத் தமிழ் இலக்கிய விழாவின் திருக்கோணமலைக்கான ஆய்வரங்கிற்கான அழைப்பிதழ் கிடைக்கப்பெற்றேன். இவ் இலக்கிய விழாவின் ஆய்வரங்கைக் கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், காணி, காணி அபிவிருத்தி போக்கு வரத்து அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடாத்துகின்றது எனும் தலைப்புடன் வந்த அழைப்பிதழ் எனது எதிர்பார்ப்பை மேலும் அதிகரித்திருந்தது. எனினும் அவ் வழைப்பிதழிலேயே தமிழ் கொல்லப்பட்டிருந்தமை மற்றோர் நெருடலை மனதினுள் எழுப்பி விட்டிருந்தது. ஆய்வரங்கின் தலைப்பாக "இலங்கை தமிழ் செல் நெறியில் சமகாலப்பதிவுகள்'' என எழுதப் பட்டிருந்தது. தொடுப்புச் சொல் 'த்' இல்லாதிருந்ததுடன் 'செல் நெறி' என்பது இரு வார்த்தைகளாக விரிந்தும் 'சமகாலப்பதிவுகள்' இடைவெளி யின்றியும் பதிப்பிக்கப்பட்டிருந்த இத் தலைப்பின் திருத்தப்பட்ட வடிவமாக " இலங்கைத் தமிழ் செல்நெறியின் சமகாலப் பதிவுகள்'' என்பதே கொள்ளப்பட வேண்டும் என மனம் சொல்லிற்று.

எப்போதும் போலவே சுமார் அரை மணி நேரத்திற்கும் மேற்பட்ட தாமத்துடன் விழா ஆரம்பமாகியது. பிரதிக் கல்விப் பணிப்பாளர் எனும் பதவியில் பணிப்பாளர் எனும் பதம் வெட்டப்பட்டு செயலாளர் என அழைப்பிதழில் எழுதப்பட்டிருந்த கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர் திரு.எம்.ரி.ஏ. நிசாம் அவர்கள் சிறந்த உரையொன்றை ஆற்றிச் சென்றார். அவ்வுரையில் அவர் இவ்விழா தொடர்பான அறிவித்தல் தனக்கு சுமார் இரண்டு நாட்களுக்கு முன்னரேயே தெரியவந்ததாக கோடிட்டுக் காட்டியுமிருந்தார். மொழியை மதத்திலிருந்து மிகச் சிறப்பாகப் பிரித்து அவர் ஆற்றிய உரை உண்மையில் பதிவாக்கப்பட வேண்டியதே. அத்துடன் தமிழ் எழுத்துப் பிழைகளை வகை தொகையின்றி மாணவர்கள் மட்டுமல்ல ஆசிரியர்களும் விடுவதாகவும் தெரிவித்திருந்தார். அவ்வாறான சூழலில் ஆய்வரங்கொன்று நடாத்தப்படுவது எவ்வளவு பொருத்தமானதாயிருக்கின்றது என எண்ணிய நான் அவ்வாய்வரங்கை ஒழுங்குபடுத்தியவர்களை மனதளவில்ப் பாராட்டிக் கொண்டேன். ஆனால் ஆய்வரங்கைக் காண, கேட்க வந்திருந்தவர்களின் எண்ணிக்கை மிக மட்டுப்பாட்டிற்குள் இருந்ததுடன் ஆசிரியர்களின் வருகை மிகமிகக் குறைவாக இருந்தமை மெல்லிய நெருடலை ஏற்படுத்தியிருந்தது. சிறுதொகை மாணவர்கள் தமது பாடசாலை ஆசிரியர்கள் சிலருடன் வருகை தந்திருந்தனர். அவர்களிடம் பேசிய போது தமக்கு கல்விக் கருத்தரங்கொன்று நிகழவிருப்பதாகவே தகவல் தரப்பட்டிருந்தது எனக் கூறினார்கள். அத் தகவலால் கலைப் பிரிவு மாணவர்களே இவ்வரங்கிற்கு வந்ததாகவும் தெரிவித்திருந்தார்கள். உடனடியாகவே சரியான தகவல்கள் பரிமாற்றப்படவில்லை என்பதும் தெளிவாகியது.

காலை அமர்வினை நெறிப் படுத்திய பேராசியர் செ.யோகராசா அவர்கள் சிறப்பான ஆரம்பத்தை அக் காலை அமர்விற்கு ஏற்படுத்திக் கொடுத்திருந்தார். அவரது நெறிப்படு த்தலில் சிறுகதைகளின் செல்நெறி தொடர்பாக திரு.சி.ரமேஸ் அவர்களும், கவிதைகளின் செல்நெறி தொடர்பாக கவிஞர் மேமன்கவி அவர்களும், நாவல்களின் செல்நெறி தொடர்பாக திரு.சு.குணேஸ்வரன் அவர்களும், புனைவு சாரா எழுத்துக்களின் செல்நெறி தொடர்பாக திரு.கே.எஸ். சிவகுமாரன் அவர்களும் தமது ஆய்வுகளை வெளியிடுவார்கள் என அழைப்பிதழ் கூறியிருந்தது. பேராசிரியர் தனதுரையில் 'சமகாலம்' என்பதை வரையறுப் பதிலுள்ள தடைகளைத் தெளிவு படுத்தினார். சமகாலம் என்பது எந்த ஆரம்ப ஆண்டையும் எந்த இறுதியாண்டையும் குறிக்க வேண்டும் என வரையறுத்துரைத்தார். ஆனால் அதன் பின் ஆய்வுரைகளை நிகழ்த்த வந்த ரமேஸ் அவர்களும் குணேஸ்வரன் அவர்களும் ஆய்வுகட்டுரைகளைச் சமர்ப்பிக்காமல் விமரிசனப் போக்கிற்குள் நுழைந்தமையுடன் ஆய்வரங்கைப் பேச்சரங்காக மாற்றியமையானது எதிர்பார்ப்புக்களைத் தவிடு பொடியாக் கியது. மேமன்கவி சற்றே ஆய்வுக் கோணத்திற்குள் பயணிக்க முயற்சித் தாராயினும் அவ்விடயம் சாத்தியப்படாமற் போக, திரு.சிவகுமாரன் அவர்கள் முற்றுமுழுதாக இவர்களிலிருந்தும், ஆய்வரங்கிலிருந்தும் விலகி புனைவுசாரா இலக்கியங்கள் என்றால் என்ன? என்பதை சிறப்பாக விளக்கிவிட்டுத் தன் பணி முடிந்ததாகக் கருதிவிட்டு அமர்ந்துவிட்டார்.

தனித்தனியாக நோக்கமுதல், ஆய்வரங்கு என்றால் என்ன என்பதை நாம் இங்கு புரிந்துகொள்ள வேண்டும். முதலில் தரப்பட்ட தலைப்பான "இலங்கைத் தமிழ் செல்நெறியின் சமகாலப் பதிவுகள்" எனும் தலைப்பை இலகு தமிழுக்கு மாற்றிப் புரிந்து கொள்ள முயற்சிப்போம். அதன்படி "இலங்கைத் தமிழில் (இலங்கைத் தமிழ்) வெளியான தற்போதுள்ள (சமகால) படைப்பிலக்கியங்களின் (பதிவுகளின்) போக்கு (செல்நெறி)" எவ்வாறுள்ளது என்பதன் ஆய்வாகவே அவ் அரங்கு அமைந்திருக்க வேண்டும். போக்கு எவ்வாறுள்ளது என்பது பற்றிய ஆய்வை முன்னெடுக்கும் போது முன்னர் எப்படியிருந்தது?, இப்போது எப்படி யிருக்கின்றது என்பதை ஒப்பிட்டு நிறுவும் முயற்சி இன்றியமையாது போய்விடு கின்றது. அதனையே நாம் ஆய்வு எனக் கொள்ளலாம். அவ்வாறாயின் முன்னர் எப்படியிருந்தது என்பதையும் தற்போது எப்படியுள்ளதென்பதையும் ஒப்பிடும் போது எவ்வெத் தலைப்புக்களில் அவ் ஒப்பீடு நிகழ வேண்டும் என்பதையும் குறித்துக்கொள்ள வேண்டும். உதார ணமாக காலை அமர்வில் கைக்கெடுத்துக் கொள்ளப்பட்ட சிறுகதைகள், கவிதைகள், நாவல்கள் மற்றும் புனைவுசாரா இலக்கியங்கள் தொடர்பாய் ஆய்விற்குட் படவேண்டிய தலைப்புக்களாக அவற்றின் களம், அவற்றின் கரு, அவற்றின் மொழிப் பிரயோகம், ஆசிரியர்களின் படைப்பிலக்கியப் பாங்கு, படைப்பாளிகளின் வாழ்நிலை அவர்களின் படைப்புக்களின் மீது ஏற்படுத்தும் தாக்கம் போன்றவற்றை கடந்த காலத்துடன் ஒப்பிட்டு நிகழ்காலத்தில் எவ்வாறுள்ளது எனும் ஆராய்ச்சியையே நாம் இத் தலைப்பின் ஊடாகக் காணவிழைந்தோம். மேலும் ஆய்விற்கு அணிசேர்க்கச் சமகாலப் படைப்புக்களின் சர்வதேச ஒப்பீட்டையும் ஆய்வாளர்கள் நிகழ்த்தியிருக்கலாம். ஆனால் ஆய்வரங்கு எனும் வார்த்தை தோற்றுப்போன களமாக கிழக்கு மாகாணத் தமிழ் இலக்கிய விழாவின் திருமலை அரங்கு நிகழ்ந்தேறியது என்பதே முடிந்த முடிவாகிப் போனது.

சிறுகதைகளையும், நாவல் களையும் எடுத்து நோக்கிய போது அவற்றின் மீதான ஆய்வுகளை நிகழ்த்த வந்த இருவரும் சிறந்த வாசிப்பாளர்கள் என்பதையும், சரியான விமர்சனக் கண்கொண்டவர்கள் என்பதையும் புரிந்துகொள்ள முடிந்தது. ஏனெனில் சிறுகதைகள் தொடர்பாக ரமேஸ் பெருமளவு எழுத்தர்ளர்களின் பெயர் களையும் அவர்களின் சிறுகதைத் தொகுதிகளையும் எமக்கு அறிமுகஞ் செய்ததுடன் அவற்றை விமர்சனப் பாங்குடன் விலாவாரியாக அடுக்கி விட்டுச் சென்றார். தொடர்ந்து குணேஸ் வரன் அவர்கள் சமகாலத்தில் வந்த ஆறு நாவல்களையும் அதனை வரைந்த மூன்று ஆசிரியர்களையும் தெளிவாக விமர்சித்து விட்டமர்ந்தார். எனினும் இருவரும் ஆய்வை நிகழ்த்தவில்லை. மேமன்கவி கவிதைகள் தொடர்பாகக் காலங்களைப் பிரித்த பொழுது, நான் முன்னரே குறிப்பிட்டது போல, அவர் ஆய்வுப் பணிக்கோர் அடித்தளமிட்டார் எனினும் ஆய்வுக்காக நான் மேற்சொ ன்ன விடயங்களை அவர் வரையறுக் காததால் அவரால் ஆய்வுக்கட்டு ரைக்குட்புக முடியாது போய்விட்டது. ஆனால் மேமன்கவி தனதுரையில் தமிழ்க் கவிதைகளின் சர்வதேசத் தரம் பற்றிய தொடுகையினால் கவிதைகள் தொடர்பான ஆய்வுக்கு புதிய தலைப் பொன்றை விட்டுச் சென்றார். திரு. சிவகுமாரன் அவர்கள் இவை எவற்றிற் குமே உட்படாமல் புனைவு சாரா இலக்கியங்கள் எவை என்பதை தெளிவாக வரையறுத்திருந்தார்.

கருத்தாடல் நேரத்தின் போது திருமலை மாவட்டத்தின் இலக்கிய வாதிகள் சிலர் இவ் ஆய்வமர்வின் ஒழுங்குபடுத்தல் உட்பட அழைப்பிதழ் அனுப்பப்படாமை, தம்முடன் கலந்தா லோசிக்காமை, போன்ற விடயங்கள் தொடர்பாகக் கடும் விமர்சனங்களை முன்வைத்துடன் இவ்வரங்கு திட்டமிட்ட மொழி அழிப்பின் ஓர் அடையாளமாகவே கொள்ளப்பட வேண்டும் எனும் கருத்தையும் முன்வைத்தனர். இதற்கு பதில் தர கலாசாரப் பணிப்பாளரோ அல்லது கலாசார உத்தியோகத்தரோ முனையாது இரண்டு நாட்களுக்கு முன்னரே இந் நிகழ்வைத் தெரிந்து கொண்ட கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர் திரு.எம்.ரி.ஏ. நிசாம் அவர்கள் எழுந்தது பெரும் அபத்தமாக இருந்தது. எனினும் முகாமைப் பாங்குடன் நேர்மையாக தமது பக்கத் தவறுகளை ஏற்றுக்கொண்ட அவர் தமது அமைச்சின் இயலாமையையும் வெளிக்காட்டிய போது தமிழ் கலாசார மாகாண திணைக்களத்தின் கையறு நிலையைத் தெரிந்துகொள்ள முடிந்தது. அத்துடன் காலை அமர்வுக்கான நன்றியுரையை நிகழ்த்த வந்த கலாசார உத்தியோகத்தர் தன்னையும் ஓர் ஆய்வாளராக எண்ணி நன்றியுரையுடன் சிறியதான ஓர் பேச்சையும் நிகழ்த்திச் சென்றிருந்தார்.

மாலை அமர்வுகளின் ஒரு பகுதி நேரம் பேராசிரியர் சி.மௌனகுரு அவர்களால் நெறிப்படுத்தப்பட எஞ்சிய நேரத்தில் பேராசியர் யோகராசா அவர்கள் அரங்கை நெறிப்படுத்தி னார்கள். மதிய உணவிற்குச் சென்ற பலரை அரகில் மீளக் காணக் கிடைக்க வில்லை. ஆய்வரங்கு இறந்துபோன மற்றோர் அரங்காகத் திகழ்ந்த மாலை அரங்கில் பேச்சுகளே நிகழ்த்தப்பட்டன. அப் பேச்சுக்களை சிங்கள மொழிபெய ர்ப்பில் தமிழ் இலக்கியங்கள் தொடர்பாக ஹேமசந்திர பத்திரனவும், தமிழ் மொழிபெயர்ப்பில் சிங்கள இலக்கி யங்கள் தொடர்பாக திக்குவெல்லை கமால் அவர்களும், தமிழுக்கு வந்த அரபு இலக்கியங்கள் தொடர்பாக எஸ்.எம் நியாஸ் அவர்களும், தமிழ், சிங்கள நாடகக் கூட்டு முயற்சிகள் தொடர்பாக மு.சதாகரன் அவர்களும் நிகழ்த்தியிருந்தனர். சமகாலப் பதிவுகளை தெரியப்படுத்திய இவர்கள் அனைவரும் பெருமளவு தகவல்களை கேட்போருக்குக் கொடுத்துச் சென்றமை ஓர் சிறப்பான விடயமாக காணப்பட்டது. மொழிபெயர்ப்பிலக்கியங்களின் தெளிவை ஓரவிற்கேனும் பெற்றுக் கொள்ள இவ்வரங்கு உதவிபுரிந்தது என்பதில் ஐயமேயில்லை. முடிவில் நன்றியுரையை இரத்தினச் சுருக்கமாக காலாசார உத்தியோகத்தர் ஒருவர் நிகழ்த்த ஆய்வரங்கு நிறைவுற்றது.

எழுந்து வரும்போது வெண்ணிற சேலையுடன் என்முன்னே கண்கள் மூளியாக்கப்பட்டும், காதுகள் அறுக்கப்பட்டும், வாய் தைக்கப்பட்டும் ஒரு பெண் அந்த அரங்கை விட்டுச் செல்வதைக் கண்டேன். காதுகளில் தமிழ்த்தாய் வாழ்த்துமட்டும் எதிரொலித்துக்கொண்டிருந்தது.

- ஜாயன் -




உங்கள் பிரதேச
செய்திகளை உடனுக்குடன்
மலைமுரசுக்கு தெரிவியுங்கள்
malaimurasu@hotmail.com
075 42 52 042

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ...சய்திகள்

## ...லாத

## ...கை?

...டம்
...ப பல
...து. இதுவரை
...போட்டிக ளில்
...களுடன் மோதிய இந்த
...ளும் பெற்ற வெற்றிகளின்
...டை யிலும், திறமையின் அடிப்ப
...யிலும் (இதுவரை விளையாடிய T20 போட்டிகளின் எண்ணிக்கை : இலங்கை 48, வெற்றி பெற்றது 29. மே.இந்தியா 45,வெற்றி பெற்றது 21), ஐ.சி.சி கொடுத்துள்ள தரத்தின் அடிப்படையிலும், ஆடுகளப் புரிதலின் அடிப்படையிலும் நோக்குகையில் மேற்கிந்திய அணியினரை விட இலங்கை அணியானது திறமையிலும் , வெற்றி வாய்ப்பிலும் உயர்ந்தநிலையில் இருக்கிறது. அத்துடன் அணியின் வெற்றிக்கு உதவக் கூடிய பிற வளங்களையும் (ஒப்பீட்டளவில்) மே.இந்தியரை விட மிக அதிக அளவில் கொண்டிருக்கும் அணி இலங்கை அணி., அப்படியிருந்தும் ஏன் இலங்கை அணி தோற்றது?.

இந்தத் தோல்வி ஆஸ்திரேலியாவுக்கு எதிராகவோ, பாகிஸ்தானுக்கு எதிராகவோ ஏற்பட்டிருந்தால் ஓரளவு நியாயப் படுத்தலாம் .. இப்படியான கேள்வியும் எழுவதற்கு வாய்ப்பில்லை. ஏனென்றால் அவர்களின் தற்போதைய போர்ம் இலங்கை அணியை ஒத்த நிலையில் உள்ளது. ஆனால் சுப்பர் 8 சுற்றில் ஒரு விக்கற் இழப்புடன் மிக இலகுவாக வென்ற மே.இந்தியத் தீவுகளிடம், ஒரு கிழமை இடைவெளியில் ஏறத்தாள அதே அளவு ஓட்ட எண்ணிக்கையை (6.85 Runs per over) எடுக்க முடியாமல், 18+ ஓவர்களில் எல்லா வீரர்களும் ஆட்டமிழந்து படுதோல்வியடைந்ததை. இலங்கை கிரிக்கட் வீரர்களின் திறனை நன்குணர்ந்தவர்களாலும், இலங்கை ரசிகர்களாலும் ஜீரணிக்க முடியவில்லை. ஏன் இப்படி ஒரு தோல்வி ஏற்பட்டது??? இதுதான் இன்று கிரிக்கெட் ரசிகர்கள் முன்னுள்ள மிகப் பெரிய கேள்வி. இதற்கான காரணத்தைப் பார்க்கும் முன், இதுவரை இலங்கை அணியினர் இறுதிப் போட்டிகளில் தோற்ற வரலாற்றைக் கொஞ்சம் பார்ப்போம்.

இதுவரை நடந்த, சர்வதேச ஒருநாள் கிரிக்கெட்டின் உலகக் கோப்பைக்கான இறுதிப் போட்டிகளில் (ONE DAY CUP) இருமுறையும், 20/20 உலகக் கோப்பைக்கான போட்டிகளில் இருமுறையுமாக, நான்கு இறுதிப் போட்டிகளில் பங்குபற்றி கோட்டை விட்ட அணி இலங்கை அணியென்பதுதான் பரவலாக எல்லோராலும் நினைவு கூரப்படுகிறது. ஆனால் இவற்றை விட பல போட்டிகளின் அரையிறுதிகள்வரை வந்து பரிதாபமாக தோற்பதை வழமையாக கொண்டுள்ளார்கள் இவர்கள் என்பது எத்தனை பேருக்கு நினைவில் உள்ளது?

2003ம் ஆண்டு தென்னாபிரிக்காவில் நடந்த ஒருநாள் கிரிக்கெட்டின் உலகக் கோப்பைக்கான? போட்டியில் அரையிறுதிவரை வந்து ஆஸ்திரேலியாவிடம் தோல்வியடைந்தார்கள். அதேபோல் 2010ல் கரிபியனில் (WEST INDIES) நடந்த 20/20 உலகக்கோப்பையிலும் அரையிறுதிவரை வந்து இங்கிலாந்திடம் மோசமாகத் தோற்றார்கள். அத்துடன் இலங்கை அணி அடிக்கடி அரையிறுதியில்



தோற்கும் இன்னொரு போட்டியும் உள்ளது, அதுதான் ஆஸ்திரேலியாவின் பிரபலமான வீ.பீ. சீரீஸ் (V.B.SERIES) எனப்படும் முத்தரப்புக் கிரிக்கட் போட்டியாகும்.. இந்தப் போட்டியில் பலமுறை இறுதிப்போட்டிவரை நன்றாக விளையாடிவிட்டு இறுதிப்போட்டியில் சொதப்பியது இலங்கையின் வரலாறு. ஏன்? எதற்காக? இலங்கை இப்படி இறுதிப் போட்டிகளில் மோசமாக விளையாடுகிறது? யாரிடமும் இதுவரை விடையில்லை. சரி முத்தரப்புப் போட்டியை விடுவோம் உலகக் கிண்ணங்களுக்கான போட்டிகளின் இலங்கையின் தோல்விகளுக்கான காரணங்களாக சொல்லப்பட்டவையையும், ஊகிக்கப் பட்டவையையும் பார்ப்போம்.

2003ம் ஆண்டு தென்னாபிரிக்காவில் இறுதியாட்டத்துக்கு போக முடியாமல் போனதற்கு, ஜெயசூரியாவின் கையை ஆஸ்திரேலிய வேகப் பந்து வீச்சாளர் பிரற் லீயின் பந்து முறித்ததுதான் காரணம் என்றார்கள். ஆஸ்திரேலியா இலங்கை அணியை விட சிறந்த அணியாக இருந்ததால் ரசிகர்கள் ஏமாற்றம் அடைந்தாலும் ஏற்றுக்கொண்டார்கள்.

2007ம் ஆண்டு மே.இந்தியத்தீவுகளில் நடந்த போட்டியில் ஆஸ்திரேலியாவின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் அடம் கில்கிறிஸ்ற் தனது கையுறைக்குள் சின்னப் பந்தொன்றை வைத்தபடி ஆடியதால்தான் தமக்கு தோல்வியேற்பட்டதாக புகார் கொடுத்தார் அப்போதய இலங்கை கிரிக்கட்டின் செயலாளர். போட்டியில் தோற்றதும் தனது கப்ரன் பதவியை ராஜினாமா செய்தார் மகேலா. இது மக்கள் மத்தியில் இலங்கை அணி மீது ஒரு மரியாதையையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தி இருந்தது. இலங்கை தோற்றிருந்தும் கூட ரசிகர்களும், மக்களும் விமான நிலையம் வரை சென்று வீரர்களுக்கு வரவேற்புக் கொடுத்தார்கள். அத்துடன் மழை காரணமாகடக்வேர்த் லூயிஸ் முறை பாவிக்கப் பட்டதால் வீரர்களின் முழுத் திறமையையும் வெளிப்படுத்த முடியவில்லை என தன்னைத்தானே சமாதானப் படுத்திக்கொண்ட சாதாரண ரசிகன், மிகச் சிறந்த வீரர்களைக் கொண்ட ஆஸ்திரேலியாவின் ஆதிக்கத்தை புரிந்து கொண்டு காலப் போக்கில் அந்த தோல்வியை மறந்தும் போனான். ஆனால் அந்த நேரத்தில் சில கிரிக்கெட் விமர்சகர்களால் ஒரு கேள்வி மு[illegible] பட்டது அது என்னவென்றால் [illegible] மிக நல்ல ஃபோர்மில் இருந்த சகலதுறை ஆட்டக்காரரான மகரூஃபை தவிர்த்துவிட்டு ஃபோர்மில் இல்லாமல் இருந்த டில்கார பெர்னாண்டோவை ஆட்டத்தில் சேர்த்தது ஏன் என்பதுதான் அது.

2009இல் இங்கிலாந்தில் நடந்த 20/20 இறுதிப் போட்டியில் பாகிஸ்தானின் அஃப்ரிடியின் அதிரடியாட்டத்தால் நிலைகுலைந்து வெற்றியை கோட்டை விட்டது இலங்கை அணி என்று காரணம் சொல்லப் பட்டது. அந்த நேரத்தில் 20/20 போட்டி புதிதாக இருந்ததாலும் புதிராக இருந்ததாலும், இலங்கையில் பிரபலமாகாததாலும் அந்தத் தோல்வியை பற்றிய விளக்கம் இல்லாமலேயே காலப் போக்கில் ரசிகர்கள் மறந்து போனார்கள்.

2010ல் இங்கிலாந்துடனான அரையிறுதிப்போட்டியில் கெவின்பீற்றர்சனின் அபார துடுப்பாட்டத்தால் தோல்வியேற்பட்டதாக கூறப்பட்டாலும், நாணய சுழற்சியில் வென்ற இலங்கை கப்ரன் சங்கக்காரவுக்கு, அன்றைய சூரிய ஒளியில்லாத காலநிலை இங்கிலாந்தின் வேகப் பந்துவீச்சாளர்களுக்கு மிகச் சாதகமாக அமைந்து, பந்தை சுவிங் பண்ண வைக்கும் என்பதையும், இது ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்கள் ரன் குவிப்பதற்கு எதிராக அமைந்து அவர்களை ஆட்டமிழக்க வைக்கும் என்பதையும் சிந்திக்காமல் முதலில் துடுப்பெடுத்து ஆடும் முடிவை எடுத்ததுதான் தோல்விக்கானமுக்கிய காரணம் . இதனால் 4.1 ஓவரில் ஜெயசூரியா, டில்ஷான், மகேலா மூவரும் ஆட்டமிழந்துவிட்டார்கள். அப்போது ஓட்ட எண்ணிக்கை 26 மட்டுமே. 8ஆவது ஓவரில் சங்ககாரவும் ஆட்டமிழந்தார் அப்போது ஓட்ட எண்ணிக்கை 47.முடிவில் இலங்கை எடுத்த மொத்த ஓட்டம் 128 மட்டுமே. இந்தத்தொகையை இங்கிலாந்து 16 ஓவர்களில் எடுத்திருந்தார்கள். இதற்கு பீற்றர்சனின் அபார ஆட்டதை மட்டும் கூறமுடியாது மாறாக இலங்கை நாணயச் சுழற்சியில் எடுத்த பாதகமான முடிவும், முதல் 4 துடுப்பாட்ட வீரர்களில் ஒருவர் தானும்நிலைத்து விளையாடாததும்தான், இந்தத் தோல்விக்கான முக்கிய காரணம் என்பதே சரியானது.

2011 ஒருநாள் போட்டிக்கான உலகக்கிண்ணப் போட்டி மும்பாயில் இலங்கை அணிக்கு பரிச்சயமான மைதானத்தில் நடந்தது. அந்தப் போட்டிக்கு சில தினங்களுக்கு முன்னால்தான் இலங்கை அணி அந்த மைதானத்தில் நியூசிலாந்துடன் விளையாடி வெற்றிவாகை சூடியிருந்தது.

இறுதிப்போட்டியில், மகேலா அபாரமாக ஆடி வெல்லுவதற்கு போதுமான ஓட்டங்கள் எடுத்திருந்தும், எதிரணியான இந்தியாவின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர்களான சேவாக்கும் சச்சினும் ஆரம்பத்திலேயே அவுட்டாகியிருந்தும், கம்பீர் எனும் தனி ஒரு வீரனிடம் இலங்கை அணி தோற்றுப் போனது. அந்தப் போட்டியின் நாணயச் சுழற்சியில் தொடங்கி போட்டி முடியும் வரையும் கப்ரன் சங்காவின் முகத்தில் மகிழ்ச்சியில்லை. நிதானமில்லை. பந்துவீச்சாளர்களை அழைத்ததில் நேர்த்தியில்லை. ஏதோ இழந்ததைப் போல ஒரு வெளிப்பாடு.. அந்தப் போட்டியின் தோல்வியுடன் தனது கப்ரன் பதவியை ராஜினாமா செய்வதாக சங்கா அறிவித்தார். அதற்குப்பின்னான அவரின் பேட்டிகளும், பேச்சுக்களும் ரசிகர்களுக்கு குழப்பத்தை ஏற்படுத்தி பரிதவிக்க வைத்தன . மெண்டிஸை தவிர்த்துவிட்டு பயிற்சிப்போட்டிகளிலும் முதல் சுற்றுப் போட்டிகளைலும் பெரிதளவில் விளையாடாத ரண்டிவை தெரிவுசெய்தது ஏன் என்ற கேள்வி எழுப்பப்பட்டது. இலங்கையின் கிரிக்கெட் ரசிகன் முதன் முதல் குழம்பத்தொடங்கியது அன்றுதான்.

இதோ இப்போ அடுத்த தோல்வி. தமது நாட்டில், தாம் உருவான மைதானத்தில், பல போட்டிகளில் வெற்றிவாகை சூடிய அதே ஆடுகளத்தில் 138 ஓட்டம் எடுக்க முடியாமல் இலங்கை தோற்றதை எந்தக் காரணத்தைக் கொண்டும் எவராலும் நியாயப் படுத்த முடியவில்லை/முடியாது. இந்தப் போட்டியில் இலங்கை அணியினர் தோற்றதற்கான காரணம் என்ன?

உண்மையில் கிரிக்கெட்டுக்கும் மன உறுதிக்கும் அல்லது மன வலிமைக்கும் மிகுந்த ஒற்றுமையிருக்கிறது. மன வலிமையில்லாத எந்த ஒரு மனிதனும் சிறந்த கிரிக்கெட் வீரனாக முடியாது. இது வரலாறு எமக்குச் சொல்லும் பாடம்.

கிரிக்கெட்டின் உருவாக்கம் அல்லது தொடக்கம் ரெஸ்ற் (TEST) கிரிக்கெட்டாகத்தான் இருந்தது. இதில் இந்த ரெஸ்ற் என்ற பதம் ஏன் வருகிறதென்றால் அந்த விளையாட்டு ஒரு மனிதனை எல்லா விதத்திலும் "ரெஸ்ற்" பண்ணுகின்றது என்பதைக் குறிப்பிடுவதற்கு ஆகும். ஒரு துடுப்பாட்ட வீரருக்கு வேகப் பந்துமூலமோ, சிறந்தகளத் தடுப்பின் மூலமோ (attacking fielding) மூலமோ அழுத்தங்களைக் கொடுக்கும் போது, அந்த அழுத்தங்களை அவர் எப்படியான தந்திரங்களை பாவித்து முறியடிக்கிறார் என்பதை ரெஸ்ற் (TEST)பண்ணுவது இந்த ரெஸ்ற் என்ற பதத்துக்கான சிறு உதாரணம் ஆகும். எதிரணியால் கொடுக்கப்படும் இந்த அழுத்தங்களை சமாளித்து புத்தி சாதூரியமாக முடிவெடுத்து வெற்றியடைவதற்கு மன உறுதி இன்றியமையாதது. இதைத்தான் அதில் ரெஸ்ற் பண்ணுகிறார்கள்..காலப் போக்கில் உலகின் வேகத்துக்கு ஏற்றாற்போல் ஒருநாள் கிரிக்கெட் என்றும், இப்போ இன்னும் சுருங்கி 20/20 கிரிக்கெட் என்றும் அந்த அற்புத விளையாட்டின் அமைப்பு மாறுப்பட்டாலும், அந்த விளையாட்டின் எந்த அமைப்பில் விளையாடினாலும், விளையாடும் ஒவ்வொருவருக்கும் இந்த மன வலிமை மிக முக்கியம். முக்கியமாக் உலகக் கோப்பை போன்ற மிகப் பெரிய அழுத்தம் நிறைந்த போட்டிகளில், பல பக்கங்களால் வரும் அழுத்தங்களை தாங்கிச் சமாளிக்கும் மன உறுதியில்லாதவர்களால் அந்தப் போட்டியில் தாக்குப் பிடித்து வெல்ல முடியாது. ஒரு இனிங்சிலோ அல்லது போட்டியிலோ நூற்றுக்கணக்கான ஓட்டங்கள் எடுப்பதால் மட்டும் மன உறுதி நிறைந்தவர் என ஒரு வீரரை சொல்ல முடியாது.

சர்வதேசக் கிரிக்கெட்டில் காலத்தால் அழியாத பெயர்களுடன் விளங்கும் வீரர்கள் எல்லோருமே தமது அணியை தோல்வியின் விளிம்பில் இருந்து வெற்றிக்கு அழைத்துச் சென்றவர்கள். இதற்கு சிலரை உதாரணமாக கூறுவதென்றால் ஆஸ்திரேலியாவின் மைக்கல் பெவன், ஸ்ரிஃப் வோஹ், பொன்ரிங், மைக்கல் ஹசி, இந்தியாவின் ட்ராவிட் (இந்த உறுதியைத்தான் அன்பாக சுவர் என்கிறார்கள்) மற்றும் லக்ஷ்மன். இங்கிலாந்து ஜொனதன் ட்ரொட், தென்னாபிரிக்கா கலிஸ், ஏ.பி.டி வில்லியர்ஸ், பாகிஸ்தான் யூசுப் யுகானா, இன்சமாம், யுனுஸ்கான் போன்றவர்களை சொல்லலாம்.

96ம் ஆண்டு உலகக் கோப்பையை வென்றபோது அரவிந்த அற்புதமாக விளையாடி சென்சுரி போட்ட

(7ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறுதிப் போட்டிக்கு ராசி...

போதும் அவருடன் ரணதுங்க கடைசி வரை நின்றுவிளையாடினாரே அதைத் தான். அந்த மன உறுதியைத்தான் இப் போதையா இலங்கை அணியிடம் காணவில்லை.

மகேலா நீண்ட அனுபவம் மிக்க வீரராக இருந்த போதும் பதட்டத்துடன் முடிவுகளை எடுத்தது அவர் செய்த முதல் தப்பு. நன்றாக பந்து வீசிய குலசேகராவுக்கும், தனஞ்ச?யாவுக்கும் தலா 3 ஓவர்களைக் கொடுத்துவிட்டு, படு மோசமாகப் பந்துவீசிக்கொண்டிருந்த மலிங்காவுக்கு 4 ஓவர்களை கொடுத்தது ஏன்?? இதை எப்படி நியாயப் படுத்த முடியும்?? உலகின் தலை சிறந்த கப்ரன் எனக் கணிக்கப் படும் மகேலாவின் இந்த முடிவுக்கான காரணம் ஒருவராலும் புரிந்து கொள்ள முடியாதது.

மற்றயது, ஆரம்பத்தில் டில்ஷானை இழந்துவிட்டதாலோ அல்லது சில பந்துகளை அடித்தாட முடியாமல் போனதாலோ என்னமோ, அடுத்த ஓவரில் எப்படியாவது ஓட்டங்களை எடுத்தே ஆவது என்ற முனைப் புடன். பதை பதைப்புடன் பந்துவீச்சுக்கு ஒவ்வாத வகையில் மகேலா , சங்க்கார மற்றும் மத்தியூஸ் ஆடிய விதம். அனுபவ வீரர்களின் இந்த ஆட்டத்தை எக்காரணத் தாலும் ஏற்றுக்கொள்ள முடியாது. மகேலா, அஞ்சலோ மத்தியூஸ் போன்றவர்கள் ஆடி அவுட்டான விதமும், ஜீவன் மென்டிஸ் மற்றும் திசர பெரரா இருவரும் ஓடி அவுட்டான விதமும் ஒரு சர்வதேச கிரிக்கெட் வீரரின் தரத்துடன் ஒப்பிட முடியாதவை. கடைசி நேரத்தில் வந்த பந்துவீச்சாளரான குலசேகராவால் இலகுவாக ஓட்டம் எடுக்க முடிகிறது என்றால், அனுபவம் நிறைந்த?, துடுப்பாட்ட வீரர்களால் ஏன் முடியவில்லை???

மகேலாவோ சங்காவோ அல்லது மத்தியூசோ இறுதிவரை நின்றிருந்தால் குலசேகராவுடன் சேர்ந்து இலகுவாக அந்தப் போட்டியில் வென்றிருக்கலாம் அல்லவா.. ஏன் நின்று விளையாடவில்லை?

அதுதுதான் பிரச்சினை.. இலங்கை அணியில் அதிரடி வீரர்கள் இருந்திருக்கிறார்கள், இருக்கிறார்கள், தட்டிவிட்டு ஓட்டம் எடுக்கும் வீரர்கள் இருக்கிறார்கள், கிளாஸ் (Class) வீரர்கள் இருக்கிறார்கள், அதிசயமான, மற்றவரை வசியம் பண்ணும் (Mystery) சுழல் பந்துவீச்சாளர்கள் இருந்தார்கள், இருக்கிறார்கள், ஆனால்... எச்சந்தர்ப்பத்திலும் எம்மால் வெல்ல முடியும் என்ற நம்பிக்கையுள்ள வீரர்கள் மிக அரிதாகவே காணப்படுகிறார்கள், ஏன் இல்லையென்றே சொல்லாம், மகேலாவுக்கும் சங்காவுக்கும் அதற்குரிய தகுதியும் திறமையும் இருந்தும் மற்றய வீரர்களில் நம்பிக்கையில்லாததாலேயோ என்னமோ அவர்கள் கடைசிவரை நின்று விளையாடுவதற்கு முயல்வதில்லை. கிரிக்கட்டுக்கு சம்பந்தமேயில்லாத வகையில் துடுப்பாடி அவுட்டாகிறார்கள்.

ஓட்டப் பந்தயத்தில் ரிலே என்றொரு ஓட்டம் இருக்கிறது. அதில் குறிப்பிட்ட தூரத்தை, பலர் சேர்ந்து பகுதி பகுதியாக ஓடிக்கடப்பார்கள். அதில் எவர் எப்படி ஓடினாலும் இறுதியாக ஓடுபவர் ஒழுங்காக ஓடவில்லையென்றால் வெற்றி பெற முடியாது. முதலில் ஓடிய எல்லோரினதும் உழைப்பும் வீணாவதைத் தவிர்க்க முடியாது. இலங்கை அணியின் கிரிக்கெட்டைப் பார்க்கும் போது எனக்கு ரிலே ரேஸ்தான் நினைவுக்கு வருகிறது. மகேலா அல்லது சங்கா இறுதி ஓட்டவீரரை போல பொறுப்பாக நின்று ஆடும் வரை இலங்கை அணியினதும் ரசிகர்களினதும் கனவு , பல இறுதிப் போட்டிகளுடன் முடிந்துவிடும்.



# மகளிர் முரசு

# இவ் வாரம் தக்காளி சூப்

தேவையானவை:
நன்கு சிவந்த தக்காளி - 4, பெரிய வெங்காயம் - 1, உள்ளி - 6 பற்கள், சோளமா - ஒரு மேசைக்கரண்டி, வெண்ணெய் - 2 தேக்கரண்டி, தக்காளி சாஸ் - 2 மே.கரண்டி, மிளகுத்தூள் உப்பு - சுவைக்கேற்ப.



செய்முறை : வெங்காயம், தக்காளியைப் தூளாக நறுக்குங்கள், உள்ளியை லேசாக தோலுரித்து தூளாக நறுக்குங்கள், ஒரு மேசைக்கரண்டி வெண்ணெயை லேசாக உருக்கி அதில் உள்ளிப் பல்லை சேர்த்து வதக்குங்குகள் . வெங்காயம் சிறிது வதங்கியதும் தக்காளியை சிறிது உப்பு சேர்த்து வதக்குங்கள். தக்காளியின் பச்சை வாசனை போக வதங்கியபின், 3கப் தண்ணீர் சேருங்கள். சிறு தீயில் 10 நிமிடம் கொதித்தபிறகு, நன்கு வடிகட்டிக் கொள்ளுங்கள். கரண்டியால் நன்கு நசித்து வடிகட்டிக்கொள்ளுங்கள். வடிகட்டிய தண்ணீர், தக்காளி சாஸ், சிறிது தண்ணீரில் சோளமா கரைத்துச் சேர்த்து, மீண்டும் 5 நிமிடம் கொதிக்கவிட்டு இறக்கி மிளகுத்தூள் தூவிப் பரிமாறுங்கள்.

## ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கான பயிற்சிகள்

1. டோலியிடம் 2ரூபா நாணயக்குற்றிகளும் 10 ரூபா நாணயக்குற்றிகளுமாக 70ரூபா 15 குற்றி நாணயங்கள் உண்டு எனின், டோலியிடம் உள்ள 2 ரூபா நாணயங்கள் எத்தனை?
   1. 5  2. 10  3. 15

2. அச்சு சஞ்சுவை விட உயரமானவன். ஆனால் பிரசாந்தை விட உயரம் கூடியவனல்ல. யுதேஸ் ரினுவை விட உயரம் குறைந்தவன். அச்சு ரினுவை விட உயரமானவன். சஞ்சு யுதேஸை விட உயரமானவன். அதி கூடிய உயரம் உடையவனும், அதி குறைந்த உயரம் உடையவனும் முறையே.
   1. பிரசாந், அச்சு  2. பிரசாந், ரினு
   3. பிரசாந், யுதேஸ்

3. ஒருவர் சம அளவான தொகைகளை ஐந்து வங்கிக் கிளைகளில் வைப்புச் செய்துள்ளார். வைப்புச் செய்த மொத்த தொகை ரூபா 14500 எனின், ஒரு வங்கியில் வைப்புச் செய்த தொகை யாது?
   1. ரூபா 2900  2. ரூபா 290  3. ரூபா 2800

4. காலை 7.30 மணிக்குப் புறப்பட்ட புகையிரதம் மாலை 5.10 மணிக்கு சென்றடைந்ததெனின், அப்புகையிரதம் பயணித்த மொத்த நேரம் யாது?
   1. 9 மணி 40 நிமிடங்கள்  2. 9 மணி 20 நிமிடங்கள்
   3. 2 மணி 40 நிமிடங்கள்

5. ஒரு போத்தலில் இருந்த பாலில் 1/2 பங்கினை அருந்திய பின்னர் எஞ்சியிருக்கும் பாலின் அளவு யாது?
   1. 500ml  2. 250ml  3. 375ml

6. 5L கொள்ளளவு உடைய ஒரு போத்தலினை நிரப்புவதற்கு 250ml கொள்ளளவுடைய சிறிய போத்தல் ஒன்றினால் எத்தனை தடவைகள் ஊற்றப்பட வேண்டும்?
   1. 20  2. 10  3. 25

7. திரைச்சீலை ஒன்றினை தைப்பதற்கு 535cm துணி தேவை. தற்போது 3m 85cm துணி உண்டெனின் இன்னும் தேவையான துணியின் நீளம் யாது?
   1. 1m 35cm  2. 2m 50cm  3. 1m 50cm

8. 9,6,5,1 ஆகிய இலக்கங்களைக் கொண்டு ஆக்கக் கூடிய மிகப்பெரிய, மிகச் சிறிய எண்கள் யாது?
   1. 9651, 1965  2. 9651, 1569  3. 9561, 1569

9. குப்பன் தன்னிடமிருந்த பென்சில்களில் 1/2 பங்கினை தம்பிக்குக் கொடுத்தான். மிகுதியில் 1/4 பங்கினை தனது தங்கைக்குக் கொடுத்தான் தற்போது அவனிடமுள்ள பென்சில்களின் எண்ணிக்கை 3 எனின், அவனிடமிருந்த பென்சில்களின் எண்ணிக்கை யாது?
   1. 8  2. 24  3. 6

10. ஒரு புத்தகத்தின் விலை ரூபா 105 எனின், அரை டசின் புத்தகங்களின் விலை யாது?
   1. ரூபா 603  2. ரூபா 1260  3. ரூபா 630

11. இலைக்கஞ்சி ஆக்குவதற்கு பொருத்தமற்ற இலை எது?
   1. முசுட்டை  2. கோப்பை இலை  3. பொன்னாங்காணி

12. நாற்று மேடையில் பயிரிட வேண்டிய தாவரம் எது?
   1. கரட்  2. கத்தரி  3. மரவள்ளி

13. கூட்டெரு தயாரிக்கும் போது பழைய கூட்டெரு சேர்க்கப்படுவதற்கான காரணம்?
   1. நுண்ணங்கிகளின் தொழிற்பாட்டைக் கட்டுப்படுத்த
   2. நுண்ணங்கிகளை இறக்கச் செய்ய
   3. பிரிகை அடையச் செய்ய

14. நான் ஒரு மாமிச் உண்ணியாவேன். என்னைப் போன்று கூடு அமைப்பது யாராலும் முடியாத ஒன்றாகும். என்னுடைய வாயில் சுரக்கும் ஒரு திரவத்தைக் கொண்டே எனது கூட்டினை அமைக்கின்றேன். என்னில் பல இனங்கள் உண்டு. எனக்குத் தேவையான உணவை என் கூட்டைப் பயன்படுத்தியே பெற்றுக்கொள்வேன். நான் யார்?
   1. தூக்கனாங்குருவி  2. காகம்  3. சிலந்தி

15. நீரைத் தூய்மைப்படுத்தும் முறைகளில் ஒன்றல்லாதது?
   1. அடையவைத்தல்  2. குளோரின் சேர்த்தல்
   3. கொதிக்க வைத்தல்

- பிரதீபா -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வாரம் பலதுறையாளன் அபிலாஷ்



எல்லாவற்றையும் திருத்திச் செய்து முடிக்க வேண்டும் என்ற ஆர்வமும், ஆசையும் மிகுந்து வெளித்தள்ளுவ தாலோ என்னவோ சமூக விடயங்கள் பலதையும் உங்களுடன் பகிர்ந்து கொள்கிறோம். எம்மைப்போல் இத்தகைய சமூக அக்கறையும், தனதான சமூகத்தின், மொழியின், கலையின், உறவுகளின் மீதான ஈடுபாடுடையோர் எத்தனை பேர் இருந்தும், அவர்கள் இன்னும் வெளிவராமற் போய் விடுவதே பெரும் குறையாக உள்ளது. இனியும் இலை மறை காய்களாய் யாரும் போய்விடக் கூடாதென்ற எண்ணத்துடனே மலைமுரசு இவ்வாரம் பல்துறையாளனான செல்வன் நவீந்திரதாஸ் அபிலாஷை அறிமுகம் செய்கிறது.

வயதுக்கு மீறிய அறிவின் தேடலோ அல்லது சிறுவயதிலிருந்து பெற்ற ஆற்றுகைகளோ அல்லது நாகரீகமான குடும்பச் சூழலோ எது எனத் தெரியவில்லை அபிலாஷின் இந்தப் பலதுறை நுகர்வுக்கு காரணமாகிப்போனது. பத்தொன்பது வயதிலேயே கவிதை, நாடகம், கதை, பேச்சு, கட்டுரை, பலகுரல் பேச்சு, டெனிஸ் மற்றும் கணித துறைகளில் தன்னை மிளிரவித்துக் கொண்டிருக்கும் அபிலர்ஷின் பணிவும் மரியாதையுமே அவரை மீறிய வெற்றிக்கு இன்று வழி விலத்திக் கொடுத்துள்ளது. என்று நானாக கூற விரும்புகிறேன். இனி அபிலாஷ் செய்து முடித்துள்ள சாதனைகளின் பட்டியலைப் பார்க்கலாம்.

தமிழ் மொழித் கவிதைப் போட்டி தின பாடசாலை மட்டம் :- தரம் 9 - 3ம் இடம்
தரம் 5 - 3ம் இடம்
தரம் 12 - 1ம் இடம்
தரம் 13 - 3ம் இடம்

மாகாணமட்ட ஆங்கில மொழித்தினப் போட்டி - கட்டுரையாக்கம் - 1ம் இடம்
தேசியப் பிரிவு குழுநாடகம் சிரேஷ்டபிரிவு - 1ம் இடம்

பாடசாலை மட்டக் கட்டுரை போட்டியில் - தரம் 7 - 3ம் இடம்
தரம் 8 - 1ம் இடம்
தரம் 9 - 3ம் இடம்
தரம் 6 - 3ம் இடம்

ஆங்கில மொழி மூல கணித வினாவிடை -
தரம் 7 - மாகாண மட்டம் - 2ம் இடம்
தரம் 9 - மாகாண மட்டம் - 1ம் இடம்
தரம் 10 - மாகாண மட்டம் - 3ம் இடம்
தரம் 8 - மாவட்ட மட்டம் - 1ம் இடம்
தரம் 11 - மாவட்ட மட்டம் - 2ம் இடம்

மாகாண மட்ட டெனிஸ்-17 வயதின் கீழ்ப்பிரிவு - 2ஆம் இடம்
19 வயதின் கீழ்ப் பிரிவு - 3ஆம் இடம்

ஏனையவை - Scrabble (2011) - அதிகூடிய புள்ளிகள்
IEMS - ஆங்கிலப் பேச்சுத் திறன் 1 ஆம் இடம்

Spell Master - (2008 - 2009) - மாவட்ட மட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட பத்துப் பேரில் ஒருவர்

இந்நீண்ட பட்டியல் இவை மட்டுமன்றி தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் அகில இலங்கை ரீதியாக முதலாமிடம் பெற்றதுடன் க.பொ.த சா.தர பரீட்சையில் 8A 1B பெற்று தன்னுடைய கல்விச் சான்றுகளை நிரூபித்துள்ளார் அபிலாஷ்.

தன்னுடைய தாய் தந்தை உட்பட தன்குடும்பத்தைச் சேர்ந்த அனைவருக்கும் நன்றிக் கடன் கூறும் இவர் தன்னுடைய கல்வியில் ஊன்றுதடியாய் நின்ற தனது ஆசிரியர்களான செல்வி. மீரா இராமகிருஷ்ணன், திருமதி புவனேஸ்வரி குணரட்ணம் மற்றும் திருமதி கோமதி அரவிந்தராஜ் ஆகியோருக்கும் நன்றி கூறிக் கொள்கிறார். அத்தோடு தனக்கு எப்போதும் துணையாய் நிற்கும் தன் தாய் திருமதி. நாளினி நவீந்திரதாஸ் அவர்களுக்கும் தன் அறிவார்ந்த அன்பை பரிமாறிக் கொள்கிறார்.

'ஒரு இலக்கை கொண்டே நாம் இயங்க வேண்டும். அவ் இலக்கின் முக்கியத்துவம் மற்றும் அதன் தரத்தை எப்போதும் மனம் கொள்ளவேண்டும். திடமான நெருக்குதலற்ற இலகு நிலையில் எம் மனதை பேணுகையில் நம் சிந்தனையில் திருப்தி காண முடியும்' என எமக்கெல்லாம் வேதம் கூறும் இவ் வித்தகன் எம் சமூகத்தின் நாளைய வரலாற்றுத் தலைவர்களுள் ஒருவராவான் என்ற நம்பிக்கையில் விடைபெறுகிறேன்.

– செம்பியன் –

## குறை இல்லாத மனிதன் இல்லை அதை குறைக்க தெரியாதவன் மனிதனே இல்லை

## பெரிய ஐங்கரனின் இரு கவிதைகள்

### இரத்தக் கவிதை

இறுதியான
இரத்தத்தின் கதையை எழுதுகிறேன்

இன்றைய நாளில்
இரத்தம் என்பதற்குரிய அர்த்தம்
என்னவென்பது
உனக்கு புரியாமல் இருக்கலாம்
அல்லது
உன் வாழ்நாளில் நீ
இரத்தத்தை காணாமலேலே இருந்திருக்கவும் கூடும்

ஆனால்
சற்று முன்னர் கூட நான் கண்டேன்
எனது உனது மற்றும் எல்லோரதும்
இரத்தத்தையும் அதை உறிஞ்சி உறிஞ்சி
குடிக்கும்
ஒரு பயங்கர ராட்சசப் பறவையையும்

அதன் வார்த்தைகள் சிவப்பாக இருந்தன
அதன் வாயும் சிவப்பாக இருந்தது
எனது உனது மற்றும் எல்லோரதும்
இரத்தத்தைப் போலவே

### அநாதைப் பயணம்

ஊர்ப் பயணம் பற்றி
உரைப்பதற்கு ஒன்றுமில்லை பெரிதாக

வீதியில் நிலாக்கள் இல்லை
வானத்தில் மலர்கள் இல்லை
காற்றில் மரண வாடையே அன்றி
மனித வாடைக்கு இடமே இல்லை

இடிந்த கோயில் என்று உணராமல்
விடியுமட்டும் வழிபடும்
ஆந்தைகள்
கட்டாக்காலி நாய்கள்
பட்டி மாடுகள்
இன்னும் பெயர் தெரியாப் பறவைகள்

ஆறுகள் கிணறுகள் மட்டும்
வற்றி வாழ்வதே இல்லை
மண்ணில் கற்களில் பறவைகள்
எங்குமே
ஊற்றெடுத்துக் கொண்டே இருந்தன
மனித இரத்தமும் அதன் நிறங்களும்

இவற்றைத் தவிர
ஊர்ப் பயணம் பற்றி
உரைப்பதற்கு ஒன்றுமில்லை பெரிதாக



ஸ்ரீ சண்முகா இந்து மகளீர் கல்லூரியில் ஐந்தாம் தர புலமைப்பரிசிலில் சித்திபெற்ற மாணவர்களுடன் அதிபர், மற்றும் ஆசிரியர்கள்



உயர்தரப் பரீட்சைகளின் பின் உலகம்
நோக்கிப் பயணிக்க உங்களுக்குத் தேவையான
ஆங்கில கல்வி நெறி
UNIVERSITY OF CAMBRIDGE
Key English Test (KET)
தொடர்புகளுக்கு
Veal Business College
No:159 A, Sea Viwe Road Trincomalee. Tel: 026 2227 622 , 077 7555 738

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த வார ஆங்கிலப் பத்திரிகைகளின் மீதானபார்வை...

## Sunday Observer:

### பாராளுமன்றத் தெரிவுக்குழுவை தவிர்ப்பது பெரும் தடையாகும்.

ஐ.தேகவும், த.தே. கூவும், ம.வி.மு.வும் பாராளுமன்றத் தெரிவுக் குழுவைத் தவிர்ப்பது பெரும் தடையாக இருப்பதாக அமைச்சர் வாசுதேவ நாணயக்கார கூறினார். இம்மூன்று கட்சிகளும் பாரளுமன்றத் தெரிவுக் குழுவின் நன்மைகளைச் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை எனவும் இம்மூன்று கட்சிகளும் பாரளுமன்றத் தெரிவுக் குழு பிரச்சனைத் தீர்வுக்குப் போதுமானதல்ல எனும் எண்ணமும் கொண்டுள்ளன எனவும் மேலும் தெரிவித்த அமைச்சர். பாரளுமன்றத் தெரிவுக் குழு போதாது எனில் வேறு எவ்வகையில் இனப்பிரச்சனையைத் தீர்க்கலாம் என இம் மூன்று கட்சிகளும் முன்மொழிவுகள் எதனையும் சமர்ப்பிக்கவுமில்லை எனவும் தெரிவித்தார். பாரளுமன்றத் தெரிவுக் குழுவை விடுத்து த.தே.கூ வுடன் மட்டும் அரசு பேசுவது பொருத்தமானது அல்ல என அவர் மேலும் தெரிவித்தார்.

### அரசின் 4 மாத கல்விச் செலவு ரூபா 11,000 மில்லியன்

2012ம் ஆண்டின் முதல் 4 மாதங்களில் அரசு 10,977 மில்லியன் ரூபாய்களைப் பொதுக் கல்வித் துறைக்காக செலவிட்டுள்ளது. மேலும் உயர்கல்விக்காக செலவிடப்பட்ட தொகை 5,737 மில். ரூபாவாகும்.

2012ன் இடைக்கால அரசிறை தொடர்பான தகவல்களை வெளியிட்டுள்ள நிதி திட்டமிடல் அமைச்சின் விபரங்கள் இவை. அவ்வறிக்கையின் படி உயர் கல்வித்துறையின் உட்கட்டுமான அபிவிருத்திக்கு 1,118 மில்.ரூபாய்களும் பொதுகல்வித்துறையின் உட்கட்டுமானச் செலவுகளிற்கு 1,238 மில். ரூபாய்களும் செலவிடப்பட்டுள்ளன எனும் விடயம் வெளியாகியுள்ளது.

### மனநிலைக் குறைவுக்குள்ளாகும் குழந்தைகள்.

சுமார் 15% வீதமான இலங்கைக் குழந்தைகள் மனநிலைக்குறைவிற்கு ஆளாகியுள்ளதாக தேசிய மனநிலை மருத்துவ நிலையம் அறிவித்துள்ளது. தனிப்பட்ட மற்றும் சமூகக் காரணங்களால் ஒவ்வொரு ஐந்து குழந்தைகளிலும் ஒரு குழந்தை மன அழுத்தமடைவதாகவும் தெரியவந்துள்ளதாக அந் நிலையம் மேலும் அறியத்தந்துள்ளது.

### காந்த அட்டைகளுடன் இந்தியர் கைது

120 காந்த அட்டைகளை தன்னுடன் எடுத்து வந்த இந்தியர் ஒருவர் இலங்கையின் சர்வதேச வானூர்தி தரையிறங்கு நிலையத்தில் கைதானார். இக் காந்த அட்டைகள் கள்ளக் கடனட்டைகளாக மாற்றப்படவே சென்னையிலிருந்து இலங்கைக்கு கடத்திவரப்பட்டுள்ளன.

### அதிகூடிய வயதான புதிய இலங்கையர் – அங்கோகாமி

116 வயதான O.T எங்கோநோனா இவ்வாண்டு February மரணமானதைத் தொடர்ந்து 115 வயதான அங்கோகாமி இலங்கையில் வாழும் மிக வயதான இலங்கையராய் மாறியுள்ளார்.

## The Sunday Leader

### ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைச் சபை விசனம்

ஜக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் தொடர்பான மீளாய்வுக் கூட்டத்துக்கு மனித உரிமை விவகாரங்களை மீளாய்வு செய்யும் குழு இலங்கையின் சட்ட நிர்வாகம், மனித உரிமைகள் போன்றவை தொடர்பான கண்டன அறிக்கைகளை தயாரித்துள்ளது.

இக் கண்டன அறிக்கையானது "மீளாய்வு செய்யப்பட்ட காலப்பகுதியில் இலங்கையில் சட்ட நடவடிக்கைகள் மேலும் பாதிப்படைந்துள்ளதுடன் அதிகாரங்களை மையப்படுத்தல், சுதந்திரமான நிறுவனங்களை அரசியல் மயப்படுத்துதல், மனித உரிமைக் குற்றங்களுக்கு எதிரான போதுமானளவு விசாரணைகளை மேற்கொள்ளாமலிருத்தல், தண்டனைகளை பின்போடுதல் போன்ற யாவும் இணைந்து ஒரு இருண்ட கலாச்சாரத்தை உருவாக்கியுள்ளது" என தெரிவித்துள்ளது. இதனால் நல்லிணக்கம் ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகள் குறைந்து வருவதாகவே தெரிகிறது. அத்துடன் போர்க்குற்றங்கள் தொடர்பாக அதனை நிகழ்த்திய இரு பிரிவினரின் மீதும் குற்றங்களை சுமத்துதல் தோல்வியடைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

### அக்ஸன் பெய்ம் (Action Faim) நீதி கோருகின்றது

"பட்டினிக்கெதிரான நடவடிக்கை" (Action Against Hunger) என்ற உலக அரசசார்பற்ற நிறுவனம் மூதூரில் ஆகஸ்ட் 2006ல் கொல்லப்பட்ட தனது 17 ஊழியர்களுக்கும் நீதி வேண்டி நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

அந்நடவடிக்கை யாதெனில் ஜக்கிய நாடுகள் சபையானது பாரபட்சமற்ற சுதந்திரமான விசாரணைகளை இக்கொலைகள் தொடர்பாக முன்னெடுத்து உண்மைகளை வெளிக்கொணர வேண்டும் எனும் மனுவுக்கான கையெழுத்துக்களைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கை ஆகும்.

"எமது நண்பர்கள் 17 பேர் ஆகஸ்ட் 04, 2006ல் எமது மூதூர் அலுவலகத்தில் ஒளிந்திருந்தார்கள். அன்று அப்பிரதேசத்தில் அரசபடைகளுக்கும் போராளிகுழுவிற்குமிடையிலே யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. முடிவில் எமது அலுவலகத்தில் இருந்த 17 Action Faim அலுவலகர்கள் வரிசையாக முழங்காலில் நிற்பாட்டப்பட்டு தலையில் சுட்டுக்கொல்லப்பட்டார்கள். இக்குற்றம் உலகத்தில் மனிதாபிமான நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கு நிகழ்த்தப்பட்ட மிகக் கேவலமான குற்றமாகும். இதன் பின்னர் அரசினால் 3 தேசிய விசாரணைக் குழுக்கள் அமைக்கப்பட்டு விசாரணைகள் செய்யப்பட்ட போதும் அவ்விசாரணைகளின் முடிவுகள் விடைகளை எதுவும் பகராதிருந்ததுடன் சான்றுகள் மறைக்கப்பட்டு தண்டனைக்குரியவர்கள் தப்பிக்க விடப்பட்டுள்ளார்கள் என அது தெரிவித்துள்ளது.

### வெளிநாட்டு விரிவுரையாளர்கள் உள்நாட்டு பல்கலைக்கழகங்களுக்கு

முன்மொழியப்பட்டுள்ள 2 பொறியியல் பீடங்களுக்கும் தேவையான விரிவுரையாளர்களை வெளிநாடுகளிலிருந்து பெற்றுக்கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானியங்களுக்கான ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கலைக்கழகங்களிற்கு என முன்மொழியப்பட்டுள்ள இவ்விரு பொறியியல் பீடங்களுக்குமான ஆரம்பகட்ட கல்வி நடவடிக்கைகளுக்கு உள்நாட்டு பொறியியல் துறை விரிவுரையாளர்களைப் பயன்படுத்துவது கடினமாக உள்ளதாலேயே வெளிநாட்டு விரிவுரையாளர்களைப் பெற்றுக்கொள்ளும் முனைப்பு எழுந்துள்ளதென ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

### SAITM மருத்துவத் தனியார் கல்வி நிறுவனத்துக்கெதிரான வழக்கு

SAITM தனியார் கல்வி நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட மருத்துவப் பட்டங்களை வழங்கும் வலுவை மீளப்பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற வழக்கு மீயுயர் நீதிமன்றத்தில் நாளை விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது. பல்கலைக்கழக ஆசிரியர் சம்மேளனத்தின் அங்கத்தவர்கள் இருவரால் இவ்வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அவர்களின் கூற்றுப்படி SAITM ஆகக்குறைந்த தேவைகளைப் பூர்த்தி செய்திருந்தால் மட்டுமே மருத்துவப் பட்டத்தை வழங்கும் வலுவை கொண்டிருக்க முடியுமென கூறப்பட்டிருக்கின்ற பொழுதிலும் ஆரம்பத்திலிருந்தே மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மூலம் SAITM மருத்துவப் பட்டத்தை வழங்குவதற்கான எந்த அடிப்படை வசதியையும் கொண்டிருக்கவில்லை என்பது தெளிவாகியுள்ளது. மேலும் 166 வாரங்கள் ரஷ்ய மற்றும் லத்தீன் மொழிகளைக் கற்பதற்கு SAITM பாடவேளைகளை ஒதுக்கியுள்ளது. ஆனால் ஏனைய முக்கிய மருத்துவப் பாடங்களை கற்பதற்கு போதுமான நேரங்களை ஒதுக்காதுள்ளதும் கேள்விக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

## The Sunday Times:

### த.தே.கூட்டமைப்பு அரசுடன் பேச்சுக்குத் திரும்புகின்றது. பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்கேற்கவும் இணக்கம்

அரசிற்கும், த.தே.கூ இடையே இந்தியா முகவராக தொழிற்பட்டமையின் பெறுபேறாக அரசுடன் பேச்சுவார்த்தைக்குத் திரும்பவும், பாரளுமன்ற தெரிவுக்குழுவில் பங்கேற்கவும் த.தே.கூ ஒப்புதலளித்துள்ளது.

மன்மோகன் சிங்குடனான இராசபக்சவின் பேச்சு வார்த்தையின் பின்னரே இத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. 06.10.2012 ல் சம்பந்தன் தலைமையில் சென்றுள்ள த.தே.கூ விடம் இந்திய பிரதமருக்கும் மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையே நடந்தேறிய பேச்சுவார்த்தையின் பெறுபேறுகளும் இந்தியாவில் வைத்து இந்திய மத்திய அதிகாரிகளால் த,தே.கூ விற்கு தெரியப்படுத்தப்படும் என்பதும் தெரியவந்துள்ளது.

த.தே.கூ யினர் இந்திய வெளிவிவகார அமைச்சர், நாராயணசுவாமி, சிவசங்கர்மேனன் போன்றோருடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

### தே.சே.வ. – த.பி.க பங்குப்பரிமாற்ற ஊழல் விடயம் அ.ஜெ யிடம்

இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரிக்கும் ஆணைக்குழுவால் தேசிய சேமிப்பு வங்கிக்கும் த பினான்ஸ் கம்பனிக்கும் இடையே நிகழ்ந்துள்ள பங்குபரிமாற்ற ஊழல் தொடர்பான விசாரணை அறிக்கை அற்றோனி ஜெனரலிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

வெளியாகியுள்ள தகவல்களின்படி தே.சே.வங்கியின் தலைவர் பிரதீப் காரியவசம் இப் பங்குப் பரிமாற்றம் ஊடாக இலஞ்சம் எதுவும் பெறவில்லை என்பதும் தெரியவந்துள்ளது.

### பெரும் நட்டமடைந்துள்ள ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ்

2011-2012 ம் நிதியாண்டில் ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனம் 17 மில்லியன் ரூபாய்கள் கூட்டத்தைப் பதிந்துள்ளது. எரிபொருட்துறை அமைச்சரால் மேற்கொள்ளப்பட்ட 'ஹெட்ஜிங்' நிதி ஒப்பந்ததால் கூடிய விலை கொடுத்து விமான எரிபொருளை கொள்வனவு செய்யும் நிலையும் இந் நட்டத்திற்கோர் காரணியாகவுள்ளது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது இவ்வாண்டு சுமார் 36% விலையை அதிகம் கொடுத்தே விமான எரிபொருள் கொள்வனவு செய்யப்படுகின்றது.

### பிரித்தானியப் பெண்களின் கைது. உ.கா.அ மீது விசாரணை

மேற்கிந்திய தீவுகள் விளையாட்டு வீரர்களின் அறைக்குள் நுழையமுற்பட்டதாக கைது செய்யப்பட்ட மூன்று பிரித்தானிய மாணவிகளின் கைது தவறானது என்பதால் அதை முன்னிலைப்படுத்திய உதவி காவல்துறை அத்தியகட்சகர் மீது விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

சினமன் கிராண்ட் உல்லாச விடுதியின் 7ம் மாடியில் மேற்கிந்திய தீவுகளின் விளையாட்டு வீரரான கிறிஸ் கெயிலின் அறைக்குள் செல்ல முயன்ற இவர்கள் கைதுசெய்யப்பட்டவுடன் எழுந்த அசாதரண சூழலில் முடிவில் 4 மணி நேரம் தடுத்துவைக்கப்பட்ட பின் இவர்கள் விடுவிக்கப்பட்டிருந்தனர். 'இக் கைது உண்மையிலேயே தேவையற்றது' என மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.


திருக்கோணமலையிலிருந்து வாராந்தம் ஞாயிற்றுக்கிழமைகளில்
வெளிவரும் மலைமுரசு பத்திரிகையில் உங்கள்
விளம்பரங்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், திருமண நாள் வாழ்த்துக்கள், சாதனையாளர் வாழ்த்துக்கள்,
மரண அறிவித்தல்கள், நினைவு நாட் குறிப்புக்கள், அந்தியேட்டி அழைப்பிதழ்கள், பெருநாள் வாழ்த்துக்கள்

போன்றவை இடம்பெற வேண்டுமா?
தொடர்புகளுக்கு
அலுவலகம்- 159A,2nd floor,Sea view Road,Trincomalee. 077 018 0218
விளம்பர முகவர்- 58,Vidyalayam Road,Trincomalee. 077 366 3103


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சம்பூரைக் குறிவைக்கும்...

சம்பூர் நோக்கி இலகுவில் வரவழைக் கின்றன.

இலங்கையில் டாடாவின் சந்தையை கையகப்படுத்த விரும்பும் மகேந்திரா கம்பனி முழுமுயற்சியுடன் சம்பூரில் முதலீட்டை மேற்கொள்ளும் வேகத்திலுள்ளது. இலங்கைப் பிரீமியர் லீக் துடுப்பாட்டப் போட்டிகளின் அனுசரணையை இந்திய மகேந்திராக் கம்பனி வழங்கியபோது அதன் தந்திரோபாய வர்த்தகத் தலைவரின் கூற்றானது துடுப்பாட்டப் போட்டிகளின் போது உச்சரிக்கப்படும் பெயர் மகேலாவுடன் மகேந்திராவாக இருக்க வேண்டும் எனத்தனது நண்பர்களிடம் குறிப்பிட்டிருந்ததும் இங்கு நினைவு கூறத்தக்கது.

## உவர்மலை விவேகானந்தாவில்...

பாடசாலை' என்னும் அபிவிருத்தி திட்டத்தின் ஓரங்கமான 'பாடசாலையில் ஓர் பசுமைப் புரட்சி' என்னும் திட்டத்தின் கீழேயே இக் கன்றுகள் பழைய மாணவர்களால் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் பழைய மாணவ சங்கத்தின் செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு அதிபர். வண. ஆனந்த சிவம் அவர்களிடம் மரக்கன்றுகளை வழங்கி வைத்தனர்.

அதிபர். வண.ஆனந்தசிவம் அவர்களிடன் சிரேஸ்ட பழைய மாணவர்களான திரு.சுரேஸ், மற்றும் திரு.தர்மபவன் ஆகியோர் மரக்கன்றை வழங்குவதையும் கலந்து கொண்டோரையும் படத்தில் காணலாம்.

## மூதூர் முஸ்லிம் பெண்கள்...

அகில இலங்கை ரீதியிலும், மாகாண மட்டத்திலும் பல்வேறு ஆக்கப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர் களுக்கும், அரசாங்கப் பரீட்சைகளில் அதி திறமை காட்டிய மாணவர்களுக்கும் இவ்விழாவின் போது பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

இவ்விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட மூதூர் வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.விஜயானந்தமூர்த்திக்கு கல்லூரி அதிபரினால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டது.




## மின்னல் தாக்கி குடும்பஸ்தர் பலி...

அவர் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவத்தில் உயிரிழந்தவர் குரங்குபாஞ்சான் பகுதியை சேர்ந்த 23 வயதான முஹம்மது தமீம் என அடையாளம் காணப்பட்டுள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கிண்ணியா காவல்துறையினர் மேற் கொண்டு வருகின்றனர்.

## கிரேஸ் இல்லத்தில்...

நடைபெற்ற இந்நிகழ்வில் இல்லப் பொறுப்பாளர். திருமதி யு.விக்னேஸ்வரன், யான்ஸி ஆசிரியர் உட்பட அங்கு கல்வி கற்பிக்கும் குணா கல்வி நிலைய ஆசிரிய குழாத்தினரும் கலந்து கொண்டனர்.

மாணவர்களின் ஆடலும் பாடலுமாக மண்டபம் கலகலத்தது. குணா நிலைய நிர்வாகி தனது உரையில் எந்தவொரு பிள்ளையும் எந்த விதத்திலும் தாழ்த்தப்பட்டவரில்லை. கல்வி உங்களின் உரிமை. அதை ஊதாசீனப்படுத்தாமல் முயற்சியுடன் முன்னேற்கப்படும் போது உங்கள் தகுதி உயரும், உங்களுக்கென ஓர் அடையாளம் கிடைக்கும் என்று கூறி அடுத்த வருடத்திலும் எமது ஆசிரியர் குழாம் இலவசமான கற்பித்தல் பணியைத் தொடரும் எனக் கூறினார்.

தொடர்ந்து இல்லப் பொறுப் பாளரின் வாழ்த்துச் செய்தி இடம்பெற்றது. பின் இல்லத்தின் உயர்தர மாணவியின் உரையுடன் நிகழ்வுகள் யாவும் இனிதே நிறைவு பெற்றன.

## பண விடயத்தில் மக்கள்...

ஆலோசனை வழங்கி யுள்ளனர் 500ரூபா, 1000ரூபா, 2000ரூபா மற்றும் 5000ரூபா நாணயத் தாள்கள் போலியாக அச்சிடுவது தொடர்பில் தொடர்ந்தும் கிடைக்கப் பெற்று வரும் முறைப்பாடுகளை தொடர்ந்தே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கந்தளாய் - பிரதேசத்தில் 1000 ரூபா போலி நாணய தாள்கள் 150 வைத்திருந்த மூன்று இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த நிலையிலேயே போலி நாணய தாள்கள் தொடர்பில் பொதுமக்கள் அவதானமாக இருக்க வேண்டுமென்று பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.



அறிவோமா தொன்மைத் தமிழை? (Heritage of Tamil Language and Culture)




## உள்ளூராட்சி வார...

போட்டி எதிர்வரும் 20.10 2012 சனிக்கிழமை நடைபெறவுள்ளது. பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் 13 வரை பயிலும் மாணவர்கள் இப் போட்டிகளிற் பங்குபற்ற முடியும். நகரசபை எல்லைக்குள் உள்ள பாடசாலை மாணவர்கள் தமது விண்ணப்பங்களை பாடசாலை அதிபருடாக எதிர்வரும் 17.10.2012ற்கு முன் அனுப்பிவைக்குமாறு வேண்டப் படுகின்றனர்.

## மொழி பிரச்சினைகளை...

அறிமுகம் செய்துள்ளது. மொழி தொடர்பான பிரச்சினைகள் எழும் பட்சத்தில் பொது மக்கள் 1956 என்ற இலக்கத்துக்கு அழைப்பினை ஏற்படுத்தி தீர்வினை பெற்றுக்கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது.

## விளையாட்டுப் போட்டி...

அமைச்சர் சுசந்த புஞ்சிநிலமே கலந்து கொள்ளவிருப்பதுடன் சிறப்பு விருந் தினராக கிழக்குப் பல்கலைக்கழகத்தின் துறைத்தலைவர் திரு. நவீன்ராஜ் அவர்கள் கலந்துகொள்ளவும் உள்ளார்.

## மூதூர் விபுலானந்தவில் ஆசிரியர் தின வைபவம்

கடந்த 6,10,2012, தி/மூ/ விபுலாந்த வித்தியாலத்தில் ஆசிரியர் தினம் விமர்சையாக கொண்டப்பட்டது. இதில் முதன்மை விருந்தினராக மூதூர் பிரதேச சபை தலைவர் A.M ஹரிஸ் அவர்கள் கலந்து கொண்டார். இன் நிகழ்வில் ஆசிரியர்கள் மாலையிட்டு வரவேற்கப்பட்டு பாத பூசை செய்து கௌரவிக்கப்பட்டனர். இதற்க்கான ஒழுங்கமைப்பை பாடசாலை அபிவிருத்தி சங்கம் மற்றும் அவிவிருத்தி குழு என்பன ஒழுங்கு செய்திருந்தன .

07,10,2012 அன்று கிழக்கு மூதூர் ஆசிரியர்களுக்கான ஆசிரியர் தினம் கட்டைபறிச்சான் விபுலாந்த வித்தியாலத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வானது கிழக்கு மூதூரில் உள்ள நான்கு அவிவிருத்தி சங்கங்களால் ஒழுக்கு செய்யப்பட்டது இதில் கிழக்கு மூதுரை சேர்ந்த ஐம்பதிற்கு மேற்பட்ட ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

## "தேடல்" சஞ்சிகை...

2012ல் தரம் 5ல் புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் புள்ளிகளைப் பெற்று சித்திபெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வும், வாசிப்பறை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் திருகோணமலை மாவட்ட அபிவிருத்திச் சங்கத்தின் ஒத்துழைப்புடன் வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு 'தேடல்' எனும் சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வும் 12.10.2012 அன்று இடம் பெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக திரு.S.தர்மலிங்கம் (உதவிக் கல்விப் பணிப்பாளர்,முறைசாரர்க்கல்வி), ஆரம்பக்கல்வி) அவர்களும் சிறப்பு விருந்தினராக திரு.ப.கந்தசாமி (திருகோணமலை மாவட்ட அபிவிருத்திச் சங்க செயலாளர்) அவர்களும் கலந்து சிறப்பித்தனர் இந் நிகழ்வில் ச.ககராஜ்-156புள்ளி, கி.ஜெனிபர்-154புள்ளி, அ.அஸீரா-151புள்ளி, இ. சக்கூர்சம்சு -150புள்ளி ஆகிய மாணவர்களும், அவர்களுக்குக் கற்பித்த ஆசிரியை திருமதி.சி.விவேகானந்தன் அவர்களும் கௌரவிக்கப் பட்டனர்.

## திருமலைத் தபாலகத்தில்...

பரிட்சையில் சித்தியடைந்த திருமலை பிரதான தபால் நிலையத்தில் பணிபுரியும் இரு ஊழியர்களின் பிள்ளைகளும் இந்நிகழ்வின் போது கௌரவிக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக கிழக்கு மாகாண அஞ்சல் அத்தியட்சகர் கலந்து சிறப்பித்தார். மேலும் இந்நிகழ்வில் இளைப்பாறிய அஞ்சல் அதிபர் திரு. ஐ.நடராஜா அவர்களுடன் சுங்க அதிகாரிகள் சிலரும் கலந்து கொண்டனர்.

அகில இலங்கை ரீதியில் தேசிய விருது வழங்கும் நிகழ்வில் விருதுகளை பெற்றுக் கொண்ட உத்தியோகத்தர்கள், கிழக்கு மாகாண மட்டத்தில் பிரிதொரு நிகழ்வொன்றில் கௌரவிக்கப்படுவார்கள் என திருமலை பிரதான அஞ்சல் அதிபர் மலைமுரசுக்கு தெரிவித்தார்.

இதே வேளை உலக தபால் தினத்தை முன்னிட்டு தேசிய முத்திரைக் கண்காட்சியொன்றும் கடந்த வாரம் கொழும்பு அஞ்சல் தலைமையகத்தில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## புலமைப்பரிசிலில் மூதூர் அந்நஹாரில் 13 பேர் சித்தி

அண்மையில் வெளியாகியதரம் ஐந்துபுலமைப்பரிசில் பரீட்சையில் திருகோணமலைமாவட்டத்தில் மூதூர் கல்விவலயத்தில் தி/மூதூர் அந்நஹார் மகளிர் மகா வித்தியாலயத்தில் இருந்துதோற்றிய 19 மாணவிகளுள் 13 மாணவிகள் 147 என்ற தகைமைப் புள்ளிக்கு மேல் பெற்றுள்ளனர. இவர்களுடன் கற்பித்த ஆசிரியர் ஜனாப். றைஸ் அவர்களையும் இப் பாடசாலை அதிபர் ஜனாபா. முபினாமூஸீன் அவர்களையும் படத்தில் காணலாம். இவர்கள்முறையே

(இம்தியாஸ்)



முதலாவது வரியில் இடமிருந்துவலமாக

A.F.இனாரா(177 புள்ளிகள்)இ சு.றோசன் சீமா(175 புள்ளிகள்), M.F.நிலுாபா(170 புள்ளிகள்), M.J.A.ஹானிம் (167 புள்ளிகள்), M.N.F. நதா(165 புள்ளிகள்), J.F.சிப்னா(163 புள்ளிகள்)

இரண்டாவது வரியில் இடமிருந்துவலமாக

M.N.றினாறீஸ்மன்(163 புள்ளிகள்), M.R.F. அமீனா(162 புள்ளிகள்), M.T.F.சபிபா(159 புள்ளிகள்), M.U.F. ஹப்சா(158 புள்ளிகள்), M.H.சஸீனாபேகம் (155 புள்ளிகள்), N.F.ஹனிதா(149 புள்ளிகள்), F.F.முன்ஸிகா (147 புள்ளிகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை, ஸ்ரீராம் பிரதர்ஸ் (பிறைவேட்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் திருக்கோணமலை வித்தியாலயம் வீதியில் 58ம் இலக்கத்திலுள்ள எஸ். எஸ். டிஜிட்டல்ஸ் இல் 14. 10. 2012ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.